# சங்கமம் தமிழ்ப்பள்ளி

**Sangamam Tamil School, Virginia - USA**

# ஆண்டு மலர்

**(2017-2018)**




**தேமதுரத் தமிழோசை உலகெங்கும் ஒலிக்கச் செய்வோம்**

www.sangamamtamilschool.org

# தமிழ்த்தாய் வாழ்த்து




**நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்**
**சீராரும் வதனமெனத் திகழ் பரதக் கண்டமிதில்**
**தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்**
**தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!**
**அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற**
**எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!**
**உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!**
**வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!**



மனோன்மணீயம் பெ சுந்தரம் பிள்ளை

# பொட்டுக்கு வாசம் உண்டா?

நாம ஒட்டற பொட்டுதானே வைக்கிறோம், வாசம் இல்லைனு சொல்லிடலாம். அப்போல்லாம் பொட்டு வாசமா இருந்திருக்கும் போல இருக்கு. ஒரு திலகம் உலகம் முழுக்க மணக்கற அளவுக்கு இருக்காம். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை தமிழ் அப்படித்தான் இருக்குன்னு தமிழ்த் தாய் வாழ்த்துல சொல்றாரு. எந்த தமிழ் விழான்னாலும் பாடுறமே, என்னதான் சொல்லி இருக்காரு அந்த பாட்டிலே?

### சுருக்கம்

இந்த பூமியை ஒரு பெண்ணா நினைச்சு, அவளோட முகத்தில், பிறை நிலா மாதிரி இருக்கும் நெற்றியில் வச்சிருக்கிற பொட்டோட வாசனை மாதிரி, எல்லா திசையும் புகழ் மணக்க இருக்கும் தமிழாகிய பெண்ணே, உன்னை வாழ்த்துகிறோம்.

### விரிவு

ஒவ்வொரு அடியா பார்த்தா கொஞ்சம் சுவையா இருக்கும். தூரக் காட்சியில் இருந்து அண்மைக் காட்சியாக (*Long shot to close-up*) ஒரு பெண்ணை பார்ப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்.

**நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்**
**சீராரும் வதனமெனத் திகழ் பரதக் கண்டமிதில்**

நீர் ஆர்ப்பரிக்கும் கடலை ஆடையாக உடுத்தி இருக்கிறாள் நிலம் என்னும் பெண். அவளுடைய எழில் ஒழுகும் அழகான முகமாக பாரதக் கண்டம்.

**தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்**
**தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே**

அந்த அழகான முகத்தில், பிறை நிலா நெற்றியாக தென்னிந்தியா. அந்த நெற்றியில் தரித்த திலகமாக திராவிட நாடு.

**அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற**
**எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்**
**தமிழணங்கே! தமிழணங்கே!**

அந்த திலகத்தோட வாசனைபோல தமிழ். அனைத்து உலகும் இன்பமுற, எல்லா திசையும் புகழ் மணக்க இருக்கும் தமிழாகிய பெண்ணே, தமிழாகிய பெண்ணே!

**உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து**
**வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!**

(எப்போதும்) இளமையாக இருக்கும் உன் திறனை, (செய்யும்) செயல் மறந்து வாழ்த்துகிறோம்.வாழ்த்துகிறோம். வாழ்த்துகிறோம்.

*********************************************

**திலகத்தோட வாசனை எல்லா திசையும் மணக்கிற அளவுக்கு இருக்குமா? எனக்கு என்ன தோனுதுன்னா, திலகத்தை கிட்ட கொண்டு வந்தாதான் அதோட நல்ல வாசனை தெரியும். அந்த மாதிரி தமிழை நமக்கு நெருக்கமாக வச்சிருந்தாதான் அதோட வாசனை தெரியும்னு சொல்றாரோ? மேலும் கருத்து இருந்தா அடுத்த ஆண்டு மலரில் எழுதுங்க. நன்றி.**

*********************************************

– மோகன்ராஜ் ஷண்முகம்

# சங்கமம் தமிழ்ப்பள்ளியின் பரிணாம வளர்ச்சி

**மோகன்ராஜ் ஷண்முகம்**
ஆசிரியர், த.இ.க இடைநிலை, சங்கமம் தமிழ்ப்பள்ளி

அனைவருக்கும் வணக்கம். சங்கமம் தமிழ்ப்பள்ளி ஐந்தாம் ஆண்டு நிறைவை அடையும் வேளையில் நமது பள்ளியின் முதல் ஆண்டு மலர் வெளிவருகிறது. இத்தருணத்தில் நமது பள்ளியின் ஆக்கமும், அதன் வளர்ச்சியும், பெற்ற அங்கீகாரங்கள் பற்றியும் உங்களிடம் பகிர்ந்துகொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.



### சங்கமம் தமிழ்ப்பள்ளியின் ஐந்து ஆண்டுகள்

பிள்ளைகளுக்கு தமிழ் கற்பிக்கும் நோக்கத்தில் 2013 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் நாள், சங்கமம் தமிழ்ப்பள்ளியாக துவங்கினோம். டல்லஸ் பல்நோக்கு மையத்தில் மூன்று வகுப்பறைகளோடும் முப்பது மாணவர்களோடும் துவங்கிய அன்று, வானம் பனித் தூவி வாழ்த்து சொன்னது. வாரம் இரண்டு மணி நேரம் நடக்கும் வகுப்புகளுக்கு பின்புலத்தில் ஆர்வலர்கள் செய்யும் பணி மகத்தானது. இதுவரை நம் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல் கற்கள். இன்றுவரை நம் பள்ளியில் பணியாற்றிக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு எனது வணக்கம்.

### 2013 – 2015 வளர்ச்சி

ஆசிரியர்கள், ஆர்வலர்கள் உள்ளிட்ட குழுவால் பள்ளி நிர்வாகம் செய்யப்பட்டது. நிர்வாகம் மற்றும் ஆர்வலர்கள் குழு நம் பள்ளிக்கு **சங்கமம் தமிழ்ப்பள்ளி** என்ற பெயரை தேர்வு செய்தார்கள்.

### நிர்வாகம் / ஆர்வலர்கள் குழு: 2013—2015

*திரு. மோகன்ராஜ் ஷண்முகம், திருமதி. மஞ்சு அய்யம்பாளையம், திரு.சாந்தகுமார் காளியப்பன், திரு. கோபாலகிருஷ்ணன் சுந்தரம், திரு. சந்திரன் முத்துசாமி, திருமதி. மெர்லின் ஜெரோம், திருமதி. மேனகா முத்து, திரு. ரவி சுப்பிரமணியம், திரு. ராஜேஷ் கருப்பசாமி, திரு. ஜெரோம் மரியரத்தினம், திரு. முத்துசேகரன் செல்லப்பகவுண்டர், திரு. வெங்கட் கவுண்டர், திரு தியாகு முத்துசாமி, திரு சாய்பாபா பூபாலன், திரு. மனோஜ்குமார் சுப்பிரமணியம், திருமதி. ஹரிதா தயாளன், திருமதி கவிதா மனோஜ்குமார்.*

- *மாணவர் திறன் மேடை ஏற்ற ஆண்டுக்கு இரண்டு விழா மற்றும் ஆசிரியர் மெச்சுதல் சிறப்பாக செய்தோம்.*
- *தமிழ் இணைய கல்விக்கழகம் (Tamil Virtual Acadamy) தேர்வு மையம் அங்கீகாரம் பெற்று, மாணவர்கள் த இ க தேர்வுகள் எழுதத் துவங்கினர்.*
- *பாடம், பயிற்சி புத்தகங்களை நாமே தயாரித்து, அச்சடிக்கவும் செய்தோம்.*
- *அமைப்பு விதிகள் (By-Laws) உருவாக்கி, நிறுவன விதிகளின் படி பதிவு செய்து, லாப நோக்கமில்லா நிறுவனமாக அங்கீகாரம் பெற்றோம் (501(c) Non Profit Organization).*
- *பள்ளிக்கான இணைய தளம் உருவாக்கினோம். மழலைகளுக்கு மழலை வகுப்பு அறிமுகம் செய்தோம்.*

## 2015 – 2017 வளர்ச்சி

*முறையான நிர்வாகக் குழு பொறுப்பேற்று பள்ளியின் அனைத்து செயல்பாடுகளும் மிகத் திறம்பட மேற்கொள்ளப் பட்டன.*

**நிர்வாகக் குழு:** ***திருமதி. கீர்த்திகா உலகநாதன், திருமதி. தீபா செந்தில்நாத், திரு. சுதாகர் ஆறுமுகம், திருமதி. மலர் பீட்டர், திரு. சந்தோஷ்குமார் சண்முகசுந்தரம், திரு பழனி ராமசாமி, திரு. சந்திரன் முத்துசாமி.***

- *பிள்ளைகள் தமிழில் கதை படிக்க ஊக்குவிக்க, பள்ளி நூலகம் துவங்கினோம். பெரும் விருப்போடும் வரவேற்போடும் தொடர்கிறோம்.*
- *உடனடித் தகவல் பரிமாற்றத்திற்கு வாட்ஸ் ஆப் குழுக்கள் அறிமுகம்.*
- *பள்ளியின் வளர்ச்சியை மனதில் கொண்டு, மெர்சர் நடுநிலைப் பள்ளியில் வகுப்புகள் நடத்தத் துவங்கினோம்.*
- *தமிழ் மாணவர்கள் தமிழ் பயில்வதால் 2 புள்ளிகளை உயர்கல்விக்காகப் பெற, வள்ளுவன் தமிழ் மையத்தோடு இணைந்து லௌடன் கவுண்டியில் தமிழை ஒரு அயல்மொழியாக (Foreign Language) அங்கீகாரம் பெற்றோம்.*
- *நிலை-4 மற்றும் மேல்நிலை வகுப்புகள் அறிமுகம். தமிழ் சார்ந்த ஓவியப் பட்டறை (Art Workshop).*
- *அடுத்த தலைமுறை ஆர்வலர்களை உருவாக்க, ஊக்குவிக்க இளம் ஆர்வலர்கள் (Youth Volunteers) திட்டம்.*
- *திருக்குறள், ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகளோடு, விழாக்கள் பெரும் அளவில் முன்னெடுத்து, மாணவர், ஆசிரியர், பெற்றோர் பங்களிப்புடன் நிறைவான நிகழ்ச்சிகளோடு களைகட்டின.*

## 2017 – 2018 வளர்ச்சி

*இரண்டாம் நிர்வாகக் குழு பொறுப்பேற்று புதிய செயல் திட்டங்களுடன் மேம்பட்ட அளவில் தொடர்கிறோம்.*

**நிர்வாகக் குழு:** ***திரு. சாந்தகுமார் காளியப்பன், திருமதி. இந்திரா மாறுசாமி, திரு. மனோஜ்குமார் சுப்பிரமணியம், திருமதி. மஞ்சு ஷண்முகம், திரு. சரவணபவன் நாட்டாம்பாளையம், திருமதி. சங்கீதா ராமகிருஷ்ணன், திரு. சாய்பாபா பூபாலன்.***

- *தமிழ்ப் பள்ளிக்கு மாணவர்கள் ஆர்வமாக வரவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு வேடிக்கை நேரம் (Fun Time) அறிமுகம்.*
- *அனைத்து பெற்றோரையும், அனைத்து மாணவரையும் பங்கேற்க வைக்க வேண்டும், எல்லா மாணவர்களுக்கும் சம வாய்ப்பு கொடுக்க முயற்சி செய்ய வேண்டும் என்ற நோக்கில் தேவையான மாற்றங்கள்.*
- *மாணவர் சுமை குறைக்க ஆண்டுக்கு மூன்று தேர்வுகள், வருட இறுதியில் மட்டும் இல்லாமல், சீரான இடைவெளியில் போட்டிகள்.*
- *மேம்பட்ட இணைய தளம், நூலக மேலாண்மை நவீனப் படுத்தல்*
- *பிள்ளைகளின் படைப்பு ஆர்வத்திற்கு மேடையாக '**மின்மினி**' சிறுவர் மலர் பதிப்பு. பள்ளியின் நினைவுப் பெட்டகமாக '**ஆண்டு மலர்**' வெளியீடு துவக்கம்.*

# எங்கள் மாணவச் செல்வங்கள்





# ஆசிரியர்குழு (2017-2018)



## ஆசிரியர்கள் நம் பள்ளியின் அடித்தளம், தூண்கள்

ஆலமரமாய் பல ஆயிரம் விழுதுகளுடன் தமிழ் என்றும் வாழ வேண்டும் என்ற கனவுடன் தமிழை வளர்க்க ஓடோடி வரும் எங்கள் ஆசிரியர் கூட்டமே, உங்கள் தன்னலமற்ற சேவையை நாங்கள் தலைவணங்குகிறோம் !!!



**மஞ்சு அய்யம்பாளையம்**
ஆசிரியர், மேல்நிலை, சங்கமம் தமிழ்ப்பள்ளி

# ஆசிரியப்பணி அறப்பணி, அதற்கே உன்னை அற்பணி!

*கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே! இது நம்ம சங்கப் பாடல் வரிகள். தமிழ் மொழி அசாத்தியமானது, ஒரே வரியை படிக்கறவங்க புரிதலால் வெவ்வேறு அர்த்தம் கற்பிக்க கூடிய சிறப்பும் சிரமமும் பெற்றது.*

*எப்படி புரிந்தாலும் உட்கருத்து ஒண்ணுதான் கற்றல் ரொம்ப சிறப்பானது. இவ்வளவு மகத்தான ஒரு செயலை சாமான்யமா செய்ய முடியுமா? அப்போ கற்பிக்கும் ஆசிரியர் பணி அதை விட மகத்தானது. இல்லையாங்க?*

*ஆமாங்க, இந்த கட்டுரை நம் பள்ளியின் தூண்களான ஆசிரியர்கள் பத்தினது. புலம் பெயர்ந்து வந்துள்ள நம் போன்றவர்களில் எத்தனை பேருக்கு அவர்களது மொழியோடு எழுத்துத் தொடர்பிருக்கிறது என்று தேடினால் எண்ணிக்கை மிகச் சொற்பமானதாகத் தான் இருக்கும். தாய்மொழி வழிக் கல்வி பயின்றவர்களுக்கும் கூட ஆங்கிலத்தில் தான் இப்போது சரளம் அதிகம். அப்படி இருக்க, நாம் தீந்தமிழை இங்கே வந்து பேசுவதும், எழுதுவதும் அதை குழந்தைகளுக்கு சொல்லித் தருவதற்கென சிறப்பான ஆசிரியர்களைக் கொண்டு பள்ளி செயல்படுவதும் நம் பெரும் சாதனை. நம் ஆசிரியர்களின் குறிக்கோளை இந்த கவிதையின் மூலம் சிறப்பாக சொல்லிவிட முடியுமென நினைக்கிறேன். இந்த மேற்கோளையே பாருங்க நாம இரண்டு விதமா புரியலாம்,*

- *பிச்சை எடுக்கும் நிலையிலும் கற்பதை நிறுத்தக்கூடாது.*
- *ஒரு வித்தையை ஒருவரிடம் கற்றுக் கொள்ள அவரிடம் சென்று பிச்சை கேட்டாவது கற்க வேண்டும்.*

*மூங்கில் காட்டில் புல்லாங்குழலை தேடும் வேலை இது முன்னோர் வகுத்த நெறிமுறை அடுத்த தலைமுறை உணர்த்திடவும் பின்னோர் அதனை மறந்துவிடாமல் போற்றிக் காத்திடவும் என்னாலியன்ற பணியினைச் செய்து என்றும் உழைத்திடுவேன். அடுத்தபிறவி எடுத்து வந்தாவது என் பணி முடித்திடுவேன்.*

*நம் ஒவ்வொருவரின் முதல் ஆசிரியர் அம்மா என்பதால்தானோ என்னவோ நாம் ஒரு*

கடத்தப்படும் மொழியை தாய் மொழி என்கிறோம். அதை மெய்ப்பிக்கும் விதமாக நம் பள்ளியின் பெரும்பான்மை ஆசிரியர்கள் பெண்களே. வீட்டில் பெற்றோர் தமிழ் பேசினாலும் குழந்தைகள் பள்ளி செல்ல ஆரம்பித்ததும் தன் அம்மா, அப்பாவுடன் இருப்பதைவிட அதிக நேரம் இருப்பது பள்ளியில் தான்.

அதுவரை வீட்டில் அழகாக தமிழ் பேசிய குழந்தைகள் மெல்ல ஆங்கிலத்தில் பேச ஆரம்பிப்பதும் இப்பொழுது தான். ‘எம்பொண்ணு நல்லாத் தமிழ் பேசிட்டிருந்தாங்க, இப்போ தமிழே பேசமாட்டேங்கறா’ இந்த வசனத்தை நாம் அனைவரும் ஒருமுறையாவது கட்டாயம் சொல்லி இருப்போம். மெல்ல தமிழ் மறந்து, துறந்து ஆங்கிலம் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள் பிள்ளைகள். என்ன செய்யலாம் என்று யோசித்த பெற்றோர்கள் ஒன்றுகூட உதயமானது நம் சங்கமம் தமிழ்ப்பள்ளி.

நம் பள்ளி தொடங்கி 5 ஆண்டுகள் கடந்துவிட்டன. 2013-ம் ஆண்டில் ஆர்வமுள்ள பல பெற்றோர்கள் ஆசிரியர்களாக பள்ளியின் துவக்க நாள் முதலே உற்சாகமாக செயல்பட்டு வருகிறார்கள். நம்மிடையே ஆசிரியராக இருப்பவர்களில் ஒருவருக்கு கூட வாழ்க்கைத் தொழில் ஆசிரியப்பணி அல்ல என்பது வியப்பூட்டும் உண்மை. இது அவர்களின் மகத்தான சேவையின் மாண்பு என்றால் இந்த அர்ப்பணிப்பை அவர்களது ஓய்வு நாட்களில் தருகிறார்கள் என்பது அதன் சிறப்பை பல மடங்கு உயர்த்துகிறது.

ஒவ்வொரு வாரமும் அவர்களது வகுப்பு நேரம் தவிர அவர்களின் சில மணி நேரத் தயாரிப்பு இருக்கிறது. வகுப்புக்கு வந்து கற்பிப்பதோடு அவர்கள் கடமையை முடித்துக் கொள்வதில்லை நம் ஆசிரியர்கள், என்ன பாடம் நடத்த வேண்டும் என்பது புத்தகத்தில் இருந்தாலும் அதை பிள்ளைகள் ஆர்வத்துடன் கற்கும் வண்ணம் விளையாட்டினூடே கற்பிக்க வேண்டும், ஒவ்வொரு வாரமும் வீட்டுப்பாடம் அவர்களுக்கு சுலபமானதாக இருக்கும்படி பார்த்துப் பதிய வேண்டும், அதை நினைவூட்ட வேண்டும், அவர்கள் அதை தாமே முடிக்கும் அளவில் உற்சாகப்படுத்த வேண்டும், மிக முக்கியமாக அவர்கள் எழுத்தோடு நில்லாமல் தமிழ்பேசும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களின் உழைப்பு சொல்லில் அடங்காது. ஆசிரியர் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பது இல்லை; நம் மரபுசார் ஒழுக்கம், பண்பு, பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு அவர்கள் ரசிக்கும் விதமாக எடுத்துக்கூறி, அவர்களை சிறந்த மனிதர்களாக்கும் உன்னதப் பணி.

நம் பள்ளியின் மற்றொரு தனிச்சிறப்பு நம் புத்தகங்கள். அவற்றை இயற்றியது நம் ஆசிரியர்களே என்பதில் நமக்கு மிகப் பெருமிதம். பிள்ளைகளின் கற்றல்திறனை மட்டுமில்லாமல் அவர்களின் ஆர்வத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் விதமாக மழலை வகுப்பு தொடங்கி ஒரே சீரான கல்வி ஓட்டம் என அவர்களின் சின்னச் சின்ன செய்கையிலும் கற்பித்தல் என்பது தங்கள் உணர்வுடன் கலந்துவிட்டதை நம்மால் உணர முடியும். அதை மிகுந்த உற்சாகத்துடனும் கடமை உணர்வோடும் செய்து வரும் நம் ஆசிரியர்களுக்கு கிடைக்கும் மிகப் பெரிய உற்சாக பானம் தம் வகுப்பு குழந்தைகளின் புன்சிரிப்பும், ‘வணக்கம் அத்தை, வணக்கம் மாமா’ என்ற முகமன்களே.

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்பது நிச்சயமான உண்மை. உண்மையிலேயே பிள்ளைகளுக்கு தமிழ் எழுத்தை மட்டுமல்லாமல் ஆர்வத்தையும் அறிவித்தவர்கள் நம் பள்ளி ஆசிரியர்களே. குழந்தைகளின் கற்கும் ஆர்வத்தை தூண்டும் தூண்டுகோலாக நமது ஆசிரியர்கள் புதுப்புது உத்திகளைக் கையாண்டு நம் கற்பித்தலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள். நம் போன்ற தன்னார்வர் சார் பள்ளிகளின் பலமே ஆசிரியர்களின் உத்வேகமும், அர்ப்பணிப்பும், தமிழை இங்குள்ள பிள்ளைகள் கற்கும் வண்ணம் எவ்வாறு எளிமைப்படுத்தி சொல்லித் தருவது என்ற சுயதேடலும் தான்.

நம் ஆசிரியர்களின் தமிழ் ஆர்வத்தினை தூண்டியதன் பின்னணியில் நிச்சயமாக அவர்களின் ஆசிரியர்கள் தான் இருப்பார்கள். அதே போல் நம் பிள்ளைகளின் தமிழ் உணர்வை வளர்ப்பதில் நம் ஆசிரியர்களின் பங்கும் உறுதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் ஆசிரியர்னா பாடம் மட்டும் நடத்தினா போதாதுங்க, அதையும் தாண்டி பிள்ளைகளுக்கு வகுப்பை சுவாரசியமாக்க, கவனிக்க வைக்க சின்ன சின்ன விளையாட்டு உத்திகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதுவும் அமெரிக்கால தமிழாசிரியர்னா சும்மா இல்லைங்க, "Why should I learn Tamil?", "Why do I have to go to Tamil class?" "It's so boring" போன்ற தொடர் கேள்விகளுக்கு பிள்ளைகள் திருப்தியடையும் விதமாக பொறுமையுடன் பதில் கூற முடிய வேண்டும். இதெல்லாந்தான் தகுதியான்னு தெரியாதுங்க.. ஆனா இவற்றையெல்லாம் நான் நம் பள்ளி ஆசிரியர்களிடம் காண்கிறேன், அதை வியக்கிறேன். ஒரு பெற்றோராக நமக்கிருக்கும் கடமைகள் ஏராளம் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால், பெற்றோராய் மட்டுமல்லாமல் ஒரு ஆசிரியராக தங்கள் வேலைகளுக்கு நடுவே தமிழுக்கும் நமக்குமாய் தொண்டாற்றும் நம் ஆசிரியர்களுக்கு ஒரு பெற்றோராய் நம்மால் தர இயன்றது நம் மனமார்ந்த நன்றியையும் மரியாதையையுமே.

இந்த மகத்தான ஆசிரியர்கள் மாணவர்களை மட்டுமில்லை, நம் பள்ளியையையும் அழகான சிற்பமாக செதுக்குகின்ற சிற்பிகள். இவ்வளவு உழைப்பையும் நேரத்தையும் நமக்கென வழங்கும் நம் பள்ளி ஆசிரியர்களுக்கு நம் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்! உங்கள் சேவை எங்கள் தேவை!



# நான் (மின்மினி) பிறந்த கதை

நான்தான் மின்மினி, உங்கள் செய்திமடல் பேசுறேன். ஒரு செய்திமடல் எப்படி பேசும்னு பாக்கறீங்களா? நான் பிறந்து ஒரு வருஷம் ஆக போகுதில்லையா அது தான் உங்களுடன் பேசலாம்னு வந்தேன். நான் எப்படி பிறந்தேனு சொல்லலாமுன்னு தோணுச்சு. அதனாலதான் பேச ஆரம்பிச்சுட்டேன்.

சங்கமம் தமிழ்ப்பள்ளியே எனது குடும்பம். நீங்கள் படிப்பு, ஆடல், பாடல் மட்டுமன்றி பல திறமைகள் பெற்றவர்கள் என்பது தெரியவந்தது. உங்கள் படைப்பாற்றல் பற்றி கேட்டுக்கொண்டிருந்தால் மட்டும் போதாது அதை மற்றவரும் பார்த்து மகிழ வேண்டும், அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் ஒரு **செய்திமடலின்** அவசியம் தோன்றியது. அதற்காகவே நான் பிறந்தேன். சிறார்களே, சங்கமம் பள்ளியில் பிறந்த நான் இன்று உங்கள் குடும்பத்தில் ஒருவராகிவிட்டேன்.

.

அடுத்து, எனக்கு பெயர் வைக்க முடிவு செய்து, பல பெயர்கள் தோன்ற, அதில் ஒன்றை முடிவு செய்ய நடத்தப்பட்ட நிகழ்ச்சி மிகவும் சுவாரசியமானது. ஒரு தேர்தல் கூட அவ்வளவு விறுவிறுப்பாக நடந்திருக்க வாய்ப்பில்லை. அனைவரும் பங்குபெற்று பரபரப்பாக நடைபெற்ற வாக்கெடுப்பில், **மின்மினி** என்ற பெயர் தொடக்கத்திலிருந்தே முன்னிலையில் இருந்து வெற்றியும் பெற்றது. அன்றுமுதல் நான்

## மின்மினி

என்று அழைக்கப்படுகிறேன். நீங்கள் உங்கள் படைப்புகள் மூலம் என்னை அழகு படுத்துவது எனக்கு மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. இதே போல் நீங்கள், உங்கள் படைப்புகளின் வடிவில் எனக்கு சத்தான உணவு கொடுத்துக் கொண்டிருந்தீர்கள் என்றால் நான் இன்னும் பல வருடம் மின்னிக்கொண்டே இருப்பேன்.

**-- உங்கள் மின்மினி**

# நிர்வாகக் குழு (2015-2017)




## நிர்வாகக் குழு

திரு. சுதாகர் ஆறுமுகம்

திருமதி. கீர்த்திகா உலகநாதன்

திருமதி. தீபா செந்தில்நாத்

திருமதி. மலர் பீட்டர்

திரு. சந்தோஷ்குமார் சண்முகசுந்தரம்

## நிதிக் குழு

திரு. சந்திரன் முத்துசாமி

திரு பழனி ராமசாமி

# நிர்வாகக் குழு (2017-2019)



## நிர்வாகக் குழு

திரு. சாந்தகுமார் காளியப்பன்

திரு. சவரணபவன் நாட்டாம்பாளையம்

திருமதி. மஞ்சு ஷண்முகம்

திருமதி. இந்திரா மாறுசாமி

திரு. மனோஜ்குமார் சுப்ரமணியம்

## நிதிக் குழு

திருமதி. சங்கீதா ராமகிருஷ்ணன்

திரு. சாய்பாபா பூபாலன்

# தமிழ்ல பேசு

**ஆர்த்தி சிதம்பரம்**
ஆசிரியர், நிலை 4, சங்கமம் தமிழ்ப்பள்ளி

"தமிழ்ல பேசு" ங்கிறது தான் நம்ம எல்லார் வீட்டுலயும் அதிகமா கேட்கக் கூடிய வார்த்தை, அப்படிதானுங்க? பெரும்பான்மையா நம்ம பசங்க தமிழ்-ல பேசணும்னு ஆசைப்படறவங்க தான் தமிழ் பள்ளிக்கு அனுப்பறாங்க. மேலாக இங்குள்ள பள்ளிகளில் தமிழ் மொழிக்கு கிரெடிட் வாங்கீட்டதால



பெற்றோர்களுக்கு தமிழ் பேசலைனாலும் பரவாயில்லை, தமிழ் கிரெடிட்டுக்கான தேர்வை வெற்றிகரமா முடிச்சுட்டாங்கன்னா போதும் அப்படீங்கிற மனப்பான்மை வந்துருச்சு. தமிழ் பேசற குழந்தைகளின் பெற்றோர்களுக்கு அவங்க குழந்தைகள் எழுத்துப் பிழையின்றி தேர்வு எழுதி முடிக்கணுமேங்கிற கவலை.

எந்த ஒரு மொழியையும் பிழையின்றி எழுதணும்னா முதல்ல அம்மொழியை சரியான உச்சரிப்புடன் பேசிப் பழக வேண்டும்.சரி, இது என்ன புதுசா இருக்கு..உச்சரிப்பிற்கும் தேர்வில் வெற்றி பெறுவதற்கும் என்ன சம்பந்தம்? அப்படீன்னு நீங்க கேட்கிறது எனக்கு புரியுதுங்க.ஏன்னா, தமிழ் மொழியின் சிறப்பே அதன் ஒலிதானுங்களே. இதை பற்றி பேசுவதற்கு முன்னால, நம்ம குழந்தைகள் பத்தி நாம தெரிஞ்சுக்குவோம்.

நம்ம குழந்தைகள் அதிக நேரம் செலவிடுவது பள்ளிகளில் தான். அதனால் அவர்கள் அதிக நேரம் கேட்கும், எண்ணும், பேசும் மொழி ஆங்கிலமாக இருக்கிறது. அதுவே அவர்களின் தாய்மொழியாக மாறி இருக்கிறது. நாம எப்படி ஆங்கிலத்தில் ஒன்று படித்து புரியவில்லை என்றால் அதனை நம் தாய்மொழியில் மொழிப்பெயர்த்து புரிந்து கொள்வோமோ அது போலத்தான் நம் குழந்தைகள் தமிழ் பயிலும் போது அதை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்து புரிந்து கொள்கிறார்கள்.

அவ்வாறு இருக்க நாம் "தமிழ்" என்பதை "ழ்" கொண்டு உச்சரிக்காமல் "ல்" கொண்டு உச்சரித்தால் குழந்தைகள் "தமிழ்" யை, "தமில்" என்று தான் எழுதுவார்கள். தமிழை சரியாக உச்சரிக்க வேண்டும் என்றால் தமிழ் மொழியின் எழுத்துக்களை நாம் சரிவர பயில வேண்டும். தமிழ் மொழியில் நாம் உச்சரிக்கும் வார்த்தைகளின் ஒலி கொண்டு அதன் பொருள் மாறும். 'அல்ல' என்பதை 'அல்லா' என்று படித்தாலோ/ உச்சரித்தாலோ/எழுதினாலோ அதன் பொருள் மாறுபடுமில்லைங்களா?

சரி, அதை கத்துக்கத்தான் தமிழ் பள்ளி அனுப்பறோமே!! அப்படினு தான நினைக்கிறீங்க? சரி தாங்க.. தமிழ் பள்ளியில் குழந்தைகளுக்கு தமிழ் மொழியின் விதிமுறைகளை ஆசிரியர்களாகிய நாங்கள் கற்றுக் கொடுத்துக்கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் தமிழ் மொழியின் அழகு குறையாமல் அவர்கள் தமிழ் கற்க வேண்டுமானால் வாரம் ஒருமுறை ஒரு மணி நேரம் வகுப்பறையில் இருந்தால் போதாது. வீட்டிலும் தமிழ் பாடங்கள் குறையாமல் இருக்க வேண்டும். என்ன வீட்லையுமா? அப்படினு நீங்க கேட்டா,ஆமா கண்டிப்பா வீட்லையும் பாடங்கள் நடத்த வேண்டும். அதற்காக தினமும் ஒரு மணி நேரம் உட்காரவைச்சு பாடம் நடத்த சொல்லலீங்க. எப்படி "தமிழ்-ல பேசு"னு சொல்லிகிட்டே இருக்கோமோ, அதோடு சேர்ந்து அவர்கள் எழுத்துக்கள் கத்துக்கும் போது அதன் ஒலி வடிவத்தை வீட்டில் நாம் உபயோகிக்கும் வார்த்தைகள் கொண்டு அவர்களுக்கு வகுப்பில் சொல்லிக்கொடுத்ததை நினைவூட்டினாலே போதும். எப்படின்னு கேட்கறீங்களா? இப்போ, உங்க குழந்தை நிலை -1 படிக்கறாங்கனு வைங்க. அப்போ அவங்க அ, ஆ, இ, ஈ கத்துக்குவாங்க. அந்த சமயத்தில அப்பா -விற்கும் ஆப்பத்திற்கு உள்ள

வேறுபாட்டை விளக்கி சொல்லலாம். அ என்பது குறில் ,ஆ என்பது நெடில் என்ற வேறுபாட்டை அந்த எழுத்துக்கள் கொண்ட வார்த்தைகள் ஒலிக்கும் போது குழந்தைகளுக்கு சொல்லி புரிய வைக்கலாம். அது போல, உங்க குழந்தைகள் நிலை -2 படிக்கும் போது மெய் எழுத்துக்கள் கத்துக்குவாங்க. மெய் எழுத்துக்களின் ஒலி வடிவம் மிக மிக முக்கியம். ஏன்னென்றால் அடுத்து வரும் வருடங்கள் அவர்கள் கத்துக்கும் உயிர் மெய் எழுத்துக்களுக்கு அடிப்படை "உயிர்" மற்றும் "மெய்" எழுத்துக்கள் தானே.

மெய் எழுத்து வரிசையில் ஒவ்வொரு எழுத்தும் உச்சரிக்கும் போது நாக்கின் நுனி வாயில் எந்த பகுதியில் படுகிறதோ அதற்கேற்றார் போல தான் ஒலி வடிவம் அமைந்திருக்கும். மேலும் மெய் எழுத்துக்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ன (ண, ன), ல (ல, ள, ழ), ர (ர, ற) வரிசைகள் அடங்கியுள்ளதால் அதன் வேறுபாட்டை அவ்வெழுத்துத்துக்கள் உச்சரிக்கும் முறை கொண்டு தான் வேறுபடுத்த முடியும். ஆகவே நம் வீட்டில் தமிழ் பேசும்போது நீங்கள் சரியாக உச்சரித்தால் அவ்வுச்சரிப்பைக் கொண்டே குழந்தைகள் அது எந்த எழுத்து என்று கண்டு கொள்வர். பின் அதைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதும் போது பிழைகள் குறையும்.

மேலும் குழந்தைகள் நிலை 4 முடிக்கும் போது அனைத்து உயிர் மெய் எழுத்துக்களும் கற்றுத் தேர்ந்திருப்பர். ஆதலால் அவர்களால் எந்த வார்த்தைகள் கொடுத்தாலும் எழுத்துக் கூட்டி படிக்க இயலும். இப்போ இங்க இருக்கிற நூலகங்களில் தமிழ் புத்தகங்கள் கிடைப்பதனால் குழந்தைகளை வாரம் ஒரு கதையாயினும் தமிழில் படிக்க ஊக்குவிய்யுங்கள். நிறைய புத்தகங்கள் படிக்க படிக்க தான் தமிழ் எழுத்துக்களில் புலமை ஏற்படும்.

சரி, எப்படி எழுத்துப்பிழையின்றி தேர்வு எழுதுவது-னு பார்த்தோம்.ஆனா தேர்வு எழுத வார்த்தைகள் தெரியவேண்டும் இல்லையா?. நிறைய குழந்தைகள் தமிழில் பேசும் போது நிறைய ஆங்கில வார்த்தைகள் இணைத்து பேசுவார்கள் அதிலும் குறிப்பாக வினைச்சொற்கள் ஆங்கில வார்த்தைகளாகவே இருக்கும். இதனால் எவ்வளவு அழகாக எழுத்துப் பிழையின்றி எழுதினாலும் சரியான தமிழ் வார்த்தை உபயோகிக்கவில்லையென்றால் தேர்வில் மதிப்பெண் குறைய நிறைய வாய்ப்பு உண்டு. அதனால நீங்க "தமிழ்-ல பேசு"னு சொல்லிக்கிட்டே இருந்தா மட்டும் போதாது ஆங்கிலம் கலக்காத தமிழ் பேச நம் குழந்தைகளுக்கு பயிற்சியும் அளிக்க வேண்டும்.

“நான் இங்க Sit பண்ணலாமா? என்று குழந்தைகள் சொல்லும் போது, sitக்கு பதில் தமிழ்ல உட்கார்-னு சொல்லனும். எங்க, நான் இங்க உட்காரலாமானு கேளு பார்ப்போம் என்று தமிழ் வார்த்தைகள் கற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள். இதனால் நிறைய தமிழ் வழக்கு வார்த்தைகள் கத்துக் கொள்வதோடு தேர்வில் வெற்றி பெறுவதற்கும் மிக உதவி புரியும்.

உயிர் மெய் எழுத்துக்களின் உச்சரிப்பில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் தயங்காமல் என்னை தொடர்பு கொள்ளவும்.நன்றி!!



லோகநாதன் ராமசாமி, ஆசிரியர், நிலை 4, சங்கமம் தமிழ்ப்பள்ளி

# ஏன் தமிழ் ?

ஊரு விட்டு ஊரு வந்த தமிழச்சி
நான்  உறவினை விட்டு வந்த தமிழச்சி
விட்டு வந்த உறவுகள் ஒன்றா, இரண்டா

மாமா, அத்தை, தாத்தா, பாட்டி
பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி
நங்கையா, கொழுந்தியா, மச்சாண்டார், மச்சினன்
அண்ணி, மன்னி, அத்திம்பேர் - என

அத்தனை உறவையும் விட்டு விட்டு - இங்கு
தனியாய் நிற்கிறோம் கஷ்டப்பட்டு
தனியாய் நின்றாலும் தமிழ் கற்க ஆசை - ஏனென்றால்
தமிழ் போல் இல்லை ஒரு ஓசை

அறிவிலிகள் கூறுவார்கள், ஆங்கிலம் போதுமே வாழ்வதற்கு
இனிமேல் தமிழ் மொழி நமக்கெதற்கு
காரணம் வேண்டுமா கேளுங்கள்
காதினை மட்டும் தாருங்கள்

ஆங்கிலம் என்பது அறிவல்ல
தமிழில் பேசினால் இழிவல்ல
செம்மொழி நம்மொழி தமிழ் மொழி
உலகில் அதுவே முதல் மொழி

ஒரு வரி ஔவை, இரு வரி வள்ளுவன், பல வரி பாரதி
எத்தனை படைப்புகள் தமிழ் மொழியில்
அவை நடத்தி செல்லும் உன்னை நல் வழியில்
நல்வழி செல்லலாம் வாருங்கள் - நான்
சொல்வதை உரக்க கூறுங்கள்

பட்டினி கிடந்து, பசியால் மெலிந்து
தாகம் தாக்க, தரையில் விழுந்து
அண்டம் இருண்டு, அங்கம் பிளந்து
துண்டம் ஆகி போனாலும்
பித்தம் பிடித்து, நித்தம் துடித்து, ரத்தம் வெடித்து போனாலும்

கொங்கு தமிழை பேச மறப்பேனா - என்
பொங்கு தமிழை பேச மறப்பேனா

தமிழச்சி நான் தமிழச்சி - US ல
பிறந்தாலும் தமிழச்சி

# மழலை வகுப்பு



# மழலையர்களும்
## அவர்களின் மழலைத் தமிழும்...

அன்னையின் அரவணைப்பில் இருந்து இறகுகள் துளிர்விடும் இளந்தளிர்களாய் பள்ளிக்குள் அடியெடுத்து வைக்கும் மழலைச் செல்வங்களுக்கு ஆரம்பக் கல்வி மூலம் அன்னைத் தமிழ் புகட்டும் ஆரம்ப வகுப்பு மழலை வகுப்பு. அன்றலர்ந்த மலர்கள்போல் மென்மையான உள்ளம் கொண்ட நம் குட்டி செல்லங்களுக்கு 'அ ஆ' என்று உயிரெழுத்துக்களை அறிமுகம் செய்து பாட்டு, கதை, கூட்டு விளையாட்டு என்று விஸ்தரித்து அவர்களுக்குத் தமிழ்ப் பள்ளியின் பால் ஓர் ஈர்ப்பை ஏற்படுத்துவதே நமது நோக்கமாகும்.

பெரும்பாலும் வகுப்பிற்கு வருவதற்கும், பெற்றோரைப் பிரிந்து தனியே முன்பின் அறிமுகமில்லாத பிற பிள்ளைகளினூடே அமர்ந்து விளையாடவும், பயிலவும் சற்றே அச்சப்படும் பிள்ளைகளை சுதாரிக்க வைத்து அவர்களை உற்சாகப்படுத்தி வகுப்பு நடைமுறைக்கு அவர்களை வழக்கப்படுத்துவது இந்தவகுப்பின் முதன்மை நோக்கம்.

"பிள்ளைகளின் மலர்ந்த முகம் சற்றேனும் வாடாமல் அவர்களை அச்சமின்றி உரையாட வைக்க வேண்டும். நாம் கேட்கும் கேள்விகளுக்கு அவர்கள் அளிக்கும் பதில்கள் பல நேரங்களில் எனக்கே வியப்பாகவும் உற்சாகமூட்டுவதாகவும் அமைகிறது" என்கிறார் வகுப்பாசிரியர் ராணி சுதாகர்.

"'எல்லாக் கேள்விகளுக்கும் எனக்கு பதில் தெரியும் என்பதால் அத்தை என்னை கேள்வி கேட்பதே இல்லை' என்று ஒரு குட்டிப்பயல்

என்னை கலகலக்க வைத்துவிட்டான்" என்று பூரிப்புடன் சொல்கிறார் ராணி.

"இறுக்கமாக இருக்கும் குழந்தைகளை பேச வைக்க மிட்டாய் தருவேன் என்று தந்திரத்தை உபயோகித்தால் ஒவ்வொரு முறையும் மிட்டாய் தந்தால் மட்டுமே பேசுவேன் என்று 'இறுக்கி'க் கொள்ளும் வாண்டுகளை சமாளிப்பது ஒரு வகை என்றால், எனக்கும் கொடுங்கள் என்று பாவமாய் முகத்தை வைத்துக்கொண்டு பாவ்லா காட்டும் சுட்டிப் பயல்களைச் சரிக்கட்டுவதும் பெரும்பாடு" என்று சிரிக்கிறார் சக ஆசிரியர் சுஜா இளங்கோவன்.


ஒவ்வொரு வாரமும் முதல் 15 மணித்துளிகள் பிள்ளைகள் கற்பித்ததை உள்வாங்கி இருக்கிறார்களா என்று சோதித்த பின்பே அடுத்தகட்ட பாடத்திற்குப் பயணிப்போம்.


ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் பிள்ளைகளின் முன்னேற்ற விவரங்கள் பெற்றோருக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்களுக்கு எந்தவகையில் வீட்டில் தனிப் பயிற்சி தேவை என்பதும் குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது.

– சுதாகர் ஆறுமுகம்

## மழலைகளின் வண்ணக் கோலம்






# தமிழே!

அனிதா செந்தில்குமார்
ஆசிரியர், நிலை 2A, சங்கமம் தமிழ்ப்பள்ளி



தமிழ் என்ற மூன்று எழுத்து மொழியே!

என் உதடுகள் உச்சரிக்கும் அழகிய மொழியே!

இவ்வுலகின் பேரழகி நீயே!

என் பிள்ளை துயில் கொள்ள

நீயின்றி எப்படி இசைப்பேன் செந்தமிழே!

# நிலை 1 வகுப்பு



# புன்னகைத்தபடியே
## உயிர் எழுத்துக்களைத் தொடங்குகிறோம்...

*மழலை வகுப்பில் தமிழை முகர்ந்து நிலை-1 வகுப்பில் உயிர் எழுத்துக்களுக்கு அறிமுகமாக வருகிறார்கள் நம் பிள்ளை செல்வங்கள். இந்த வகுப்பில் நான்கு முதல் ஆறு வயதுக்குற்பட்ட பதினாறு குழந்தைகள் படிக்கிறார்கள். இவர்களுக்கு இலக்கு: உயிர் எழுத்துக்களை அறிவது, எழுதுவது, தமிழ் எண்கள், பறவைகள், மிருகங்கள், வண்ணங்கள், வடிவங்கள் கற்பது மற்றும் தமிழில் சிறு கதைகள் கூறுவதும் ஆகும்.*

*நிலை-1 மாணவ செல்வங்களை ஒரு இடத்தில் அமரவைத்து பாடம் சொல்லி கொடுப்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை. எங்களால் முடியும் என்று நிலை-1 ஆசிரியர்களாக கடமை ஆற்றுபவர்கள் ஹரிதா, தீபக் மற்றும் நித்யா. இவர்களின் கற்பிப்பு முறைகளை பார்ப்போமா?*

*உயிர் எழுத்துக்களை ஆசிரியர் பலகையில் எழுத, மாணவர்கள் பத்து முதல் பதினைந்து முறை*

அவர்களது குறிப்பு புத்தகத்தில் எழுதுவார்கள். மாணவர்களை உற்சாகப்படுத்த அவர்களுக்கும் பலகையில் எழுத வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

மாணவர்களை நான்கைந்து குழுக்களாக பிரித்து பாட புத்தகத்தில் உள்ள பாடல்களை பாட வைப்பது வழக்கம்.கதைகள் எளிதாக புரிய, தகுந்தாற்போல் படங்கள் வரைந்து கதைகள் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் மூன்று மாணவர்களுக்கு சிறுகதை புத்தகம் கொடுத்து, அடுத்து வரும் வாரத்தில் குழந்தைகளை கதை சொல்ல முயற்சி செய்யப்படுகிறது.

மாணவர்களை உற்சாகப்படுத்த ஆசிரியர்கள் கையாளும் யுத்தி என்ன தெரியுமா? பரிசுச்சீட்டு. ஆம். நல்ல நடத்தை, கதை சொல்லுதல் மற்றும் வகுப்பில் பங்கேற்கும் மாணவர்க்கு பரிசுச்சீட்டு நிச்சயம்.

வேடிக்கை நேரம்: நிலை-1 மாணவர்களுக்கு பிடித்த வேடிக்கை என்ன தெரியுமா? படங்கள் பார்த்து அறிவது மற்றும் சொல்வதை கேட்டு மற்ற மாணவரிடம் பரிமாறுவதும் ஆகும்.

ஆசிரியரை பொறுத்தவரை மாணவர்களின் திறன் பற்றிய மதிப்பீடு என்ன தெரியுமா? எழுதுவது, சொல்லிக்கொடுப்பதை கற்று கொள்வது.


இதெல்லாம் சுலபமே. தமிழில் பேச வைப்பது தான் கடினம். குழந்தைகள் தமிழில் பேச பெற்றோரின் பங்களிப்பு முக்கியமானது. ஆம். வீட்டில் தமிழில் பேசுவோம். தமிழ் சிறுகதைகளை வாரம் ஒரு முறையாவது வாசித்துக் காட்டுவோம்.

ஹரிதாவின் மென்மையான அணுகுமுறையை சில வாண்டுகள் அனுகூலமாக எடுத்துக்கொண்டு அவ்வப்போது குறும்பு செய்தாலும், இன்முகத்தோடு அவர்களைக் கையாள்வதில் வல்லவர். இவருக்கு பக்க பலமாக நித்யா ஜெய்'யும், தீபக்கும் சக ஆசிரியர்களாகத் திறம்பட செயலாற்றி வருகிறார்கள்.


நித்யா மற்றும் தீபக்கின் தனிச் சிறப்பு நல்ல கதைகளை புத்தகங்களில் இருந்து தேடிப்பிடித்து அவற்றை குழந்தைகளின் உற்சாகத்தோடு அவர்கள் பாணியிலேயே வழங்குவது!. பள்ளி தாழ்வாரத்தில் நாம் நடந்தால் நிலை-1 வகுப்பின் கூட்டு உச்சரிப்பு சத்தம் நம்மையும் சற்றே நின்று கவனித்துவிட்டுச் செல்ல வைக்கும். இந்த ஆசிரியர்களின் கையாள்கை நம் பள்ளிக்குப் பெருமை தேடித் தரும் வகையில் மிகச் சிறப்பாகஅமைந்து வருகிறது. இவர்களின் சீரிய பணி மென்மேலும் தொடர வாழ்த்துவோம்!

**– நீதிதேவன்**




தமிழ் பூச்செண்டு
- தீரா (நிலை 1)


Captain Underpants!
Tra la la
ARJUN VINOD NILAI-1


Max from secret life of pets
ARJUN VINOD
NILAI-1


பிரதிக்
நிலை 1

# நிலை 2A வகுப்பு



# தோப்புக்கரணமும் தமிழுமென
## பக்குவமாய் பாடம் கற்கின்றோம்...

*எளிய முறையில் பாடத்திட்டங்களை வடிவமைத்து இருக்கும் நிலை-2 இல் உயிர் எழுத்துச்சொற்களைத் திருப்புதல் செய்தபின் மெய்யெழுத்துச் சொற்களை அறிமுகப்படுத்துகிறோம். பாடுதல், எதிர்ச் சொல் அறிதல், கதைகள் கூறுதல் என்று மாணவர்களுக்கு எளிமையான வழியில் சொற்களை அறிமுகப்படுத்துகிறோம். எங்களது முத்தான மாணவர்களுக்கு செயல் வழி கற்றல் மூலமாக பாடங்களை கற்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி கொள்கிறோம்..*


தமிழ்தாய் வாழ்த்துடன் வகுப்பை தொடங்குவோம், பிள்ளைகளை இருபது முறை தோப்புக்கரணம் போட வைப்போம், பிள்ளைகளிடம் ஒவ்வொரு வாரமும் 10 நிமிடம் தமிழில் உரையாடுவோம்.. பிறகு வகுப்பை தொடங்குவோம்.

ஆசிரியர்கள் நாங்கள் வகுப்பிற்கு வருவதற்கு கொஞ்சம் தாமதமானால் கூட நாங்கள் வரும் வரை பெற்றோர்கள் பிள்ளைகளை பார்த்துக்கொண்டு எங்களுக்கு உதவி செய்வார்கள், எங்கள் வகுப்பிற்கு ஏதாவது உதவி தேவை என்றால் உடனே எங்களுக்கு உதவி செய்ய முன் வருவார்கள் மற்றும் பிள்ளைகளை தவறாமல் விட்டுப் பாடம் செய்ய வைத்து அனுப்புவார்கள். அனைத்து பெற்றோர்களுக்கும் மிக்க நன்றி!


**- கவிதா மனோஜ்குமார்,**
**அனிதா செந்தில்குமார்**








படத்தை பெயருடன் பொருத்துதல்
ஆமை
அணில்
இந்தியா
உண்டியல்
ஊஞ்சல்
ஈட்டி
எலுமிச்சை
ஐந்து
ஒன்று
ஏணி
ஓடம்
ஔவை
எஃகு
5
1


தாத்தா பாட்டியுடன்
கோடை விடுமுறை
கொண்டாட்டம்

# நிலை 2B வகுப்பு



# தோப்புக்கரணமும் தமிழுமென

## பக்குவமாய் பாடம் கற்கின்றோம்...

இந்த வகுப்பில் மாணவர்கள் தமிழ் மெய் எழுத்துக்கள் படிக்க மற்றும் எழுத கற்பார்கள். மெய் எழுத்துக்கள் மற்றும் உயிர் எழுத்துக்கள் தொடர்புடைய வார்த்தைகள் கற்பார்கள். ஒவ்வொரு வாரமும் வகுப்பு தொடங்குவதற்கு முன்னர் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி மற்றும் 20 முறை தோப்புகரணம் போட்டு வகுப்பை தொடங்குவோம். திருக்குறளை பொருளுடன் படிப்பார்கள். குழந்தைகள் பாடல்களும் படிப்பார்கள்.

இந்த வகுப்பில் நாங்கள் இந்த வார நட்சத்திரம் என்ற தலைப்பில் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு வாரம் தங்களை பற்றியும் குடும்பம், பள்ளி, பிடித்த நிறம், பிடித்த உணவு, பிடித்த விளையாட்டு மற்றும் அவர்களுடைய கனவு பற்றி குறைந்தது 5 நிமிடம் பேசுவார்கள்.

அடுத்து உரையாடல் என்ற தலைப்பில் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை இரண்டு குழந்தைகள் கொடுக்கப்பட்ட தலைப்பில் தமிழில்

ஒரு எழுத்தை (உயிர் அல்லது மெய் எழுத்தை) சொல்லி அதன் தொடர்புடைய வார்த்தைகளை கண்டுபிடிக்கும் விளையாட்டை இரண்டு குழுக்களாக பிரித்து விளையாட்டு முறையில் குழந்தைகளுக்கு அதிக வார்த்தைகள் பயிற்றுவிக்க முயல்கிறோம். குழந்தைகள் எழுத்தை சொல்லி வார்த்தை சொல்லும் போது தமிழ் சொற்களுக்கு பதிலாக அதேபோல் ஒலிக்கும் ஆங்கிலச் சொற்களை அப்பாவியாகச் சொல்வது சுவையாகவும் நமக்கு சிரிப்புட்டுவதாகவும் இருக்கும். உதாரணமாக ‘வ்’ என்ற வார்த்தை சொன்னால் மறுகணமே குழந்தைகள் live என்று பதிலளித்துப் பரிகாரம் செய்வார்கள்!! அன்றாடம் நாம் உபயோகிக்கும் ஆங்கில வார்த்தைக்கு இணையான தமிழ் வார்த்தைகளை கொடுத்து அதை தேர்வுக்கு படித்து வர சொல்வது வழக்கம். இது பெற்றோர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது. வகுப்பில் முடிந்தவரை ஆங்கிலம் கலக்காமல் பேச சக ஆசிரியரான அனிதா பாபுவும் நானும் முயற்சி செய்கிறோம்.

**- கலை மகேஷ்**






# டீரெக்ஸ் டைனோசரும் அதன் நண்பர்களும்

ஒரு ஊரில் ஒரு டீரெக்ஸ் டைனோசர் இருந்து.



அதற்கு விளையாட நண்பர்கள் இல்லை. அதனால் டீரெக்ஸ் கோவிலுக்குச் சென்று எனக்கு நிறைய நண்பர்கள் வேண்டும் என்று சாமிகிட்ட கேட்டுச்சு.



சாமி நிறைய நண்பர்கள் கொடுத்தாங்க. டீரெக்ஸ் அம்மா கேட்டாங்க " உனக்கு எப்படி இத்தனை நண்பர்கள் கிடைச்சாங்க?" அப்ப டீரெக்ஸ் சொல்லுச்சு "நான் பொய் சொல்லாம எல்லோருக்கும் நல்லா உதவி செய்தேன். அதனால சாமி எனக்கு நிறைய நண்பர்கள் கொடுத்தாங்கன்னு "சொல்லுச்சு.



எல்லா டீரெக்ஸ்சும் சேர்ந்து ஒரு எரிமலை பக்கத்துல, ஓடிப் பிடித்து தொட்டு விளையாடியது. அப்போ ஒரு சத்தம் கேட்டது.எரிமலை வெடித்தது.எல்லாப் பக்கமும் எரிமலைக் குழம்பு ஓடியது.நண்பர்கள் அனைவரும் அதில் நீச்சல் அடித்து விளையாடினாங்க.




எப்படி டீரெக்ஸ் எரிமலைக் குழம்பில் நீச்சல் அடித்து விளையாடுதுன்னு யோசிக்கிறீங்களா? அதற்கு ஒரு அதிசிய சக்தி உண்டு. அதனால தீ அவங்களை ஒன்னும் பண்ணாது. அவ்வளவுதான்.







கதை மற்றும் ஓவியம்: ரோகித் சரவணபவன், அபிமன்யு ராஜ்குமார், சிமுகன் யுவராஜ்.


சஞ்சய செந்திலகுமரன் நிலை-2B


தமிழ் உயிர்மெய் எழுத்துகள்
தான்யா பாக்கியராஜ்
நிலை 2B


சாதனா
நிலை-2
HAPPY BIRTHDAY


ரோஹித் ரவி
நிலை-2B


அன்விதா
நிலை-2B
என் பெயர்
அன்விதா
என்னுடைய வயது
ஆறு
என்னுடைய ஊர்
சென்னை
எனக்கு பிடித்த நிறம்
ஊதா
எனக்கு பிடித்த உணவு
6


ரோகித் சரவணபவன்
நிலை 2B


ரோகித்
சரவணபவன்
நிலை 2B


ரோகித்
சரவண்பவன்
நிலை 2B

# நிலை 3 வகுப்பு




# உயிர் மெய் எழுத்துக்களுடன்

## எங்களின் பேச்சும், விளையாட்டும்...

*உயிர் எழுத்தாம் முதலடி தவழ்ந்து, மெய் எழுத்தாம் இரண்டாமடி நடந்து, முன்னேறும் குழந்தைகளுக்குத் துள்ளிக் குதித்தோட உயிர்மெய் எழுத்துக்களைக் கற்பிப்பது 'நிலை 3'ன் மைய நோக்கமாகும்.*


*பறந்து விரிந்த அமுதக் கடலாம் தமிழில், எண்ணற்ற வெண்முத்துக்கள், ஈரெழுத்துச் சொற்களும் மூவெழுத்துச் சொற்களும். சிப்பியைப் பிரித்து முத்தெடுப்பதைப் போல், மாணவர்கள் சொற்களைப் பிரித்து உயிர்மெய் எழுத்துக்களின் விதிகளை அறிகின்றனர்.*

*மேலும், 'ல'கர, 'ள'கர, 'ழ'கர வேறுபாடுகளையும், 'ன'கர, 'ண'கர பயன்பாட்டையும் மாணவர்கள் கற்கின்றனர்.*


*ஐயன் வள்ளுவன் தந்த பொதுமறையையும், ஔவை தந்த கொன்றை வேந்தனையும், இன்னும் பிற நற்பாடல்களையும் கதைகளையும் கற்கிறார்கள் நம் 'நிலை-3' மாணவர்கள்.*


*பெற்றோர்களிடம் கூடத் தாய்மொழியில் பேசுவது குறைந்தபோன இக்காலகட்டத்தில், வீட்டில் தமிழில் உரையாடும் காணொளியை வாரந்தோறும் தங்களுக்கு அனுப்புமாறு அறிவுறுத்துகின்றனர் ஆசிரியர்கள் சோபியாவும், யோகியும்.*


**- தீபக் (செல்வகுமார் விஸ்வநாதன்)**



இந்தியாவின் தேசியப் பறவை
மயில்
அதித்யா மனோஜ்
நிலை-3
இந்தியாவின் தேசியப் பறவையைப்பற்றி சில துளிகள்.
பார்க்க பார்க்க அலுக்காத ஆச்சர்யங்களில் ஒன்று மயில். 1963-ல் மயில் இந்தியாவின் தேசியப் பறவையாக அறிவிக்கப்பட்டது.
அதிக ஒலியை எழுப்பும் பறவைகளில் மயிலும் ஒன்று. மயிலினங்களை தேசியப் பறவையாக கொண்ட வேறு நாடுகள் - மியான்மர் மற்றும் காங்கோ.



சங்கமம் தமிழ்ப் பள்ளி
இமயா
நிலை-3
அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ
உயிர் எழுத்துகள்
மெய் எழுத்துகள்


எனக்கு போக்கிமான் ரொம்ப பிடிக்கும். இந்த போக்கிமான் பெயர் கெங்கார். இது ஒரு நிழல் போக்கிமான். இது மெகா கெங்கார் ஆக மாறும்.
கெங்கார்
ரிஷி கோடிநாயகம்
நிலை-3


எழுத்துகளை இணைத்துச் சொல் உருவாக்குவேன்
ல்
ப க பா வா
பல் கல் பால் வால்
யம்
தா கா சா மா
தாயம் காயம் சாயம் மாயம்
சம்யுக்தா செந்தில்குமார்
நிலை-3



மட்டைப்பந்து

மட்டைப்பந்து இந்தியாவில் விளையாடப்படும் ஒரு விளையாட்டு. மட்டைப்பந்து இரு அணிகள் சேர்ந்து விளையாடும் விளையாட்டு. ஒரு அணிக்கு பதினோரு விளையாட்டு வீரர்கள் இருப்பார்கள். நான் இந்தியா சென்ற பொழுது நண்பர்களுடன் சேர்ந்து மட்டைப்பந்து விளையாடினேன்.

கௌதம் அண்ணாமலை
நிலை-3

# நிலை 4 வகுப்பு




# உயிர் மெய் உச்சரிப்பு,

## நீதிக்கதை, வார்த்தை விளையாட்டென வாரமொறு சுவையான பந்தி...

இந்த வகுப்பிற்கு வரும் மாணவர்கள் தமிழ் உயிரெழுத்து மெய்யெழுத்துகளோடு இணைந்து உயிர்மெய் எழுத்துக்களில் ‘கூ’ வரிசை வரை கற்றுத் தேர்ந்தவர்கள். மாணவர்களுக்கு மீதமுள்ள உயிர்மெய் எழுத்துக்களையும் கற்றுக் கொடுப்பதோடு எழுத்துக்களை பயன்படுத்தும் விதிமுறைகள், உச்சரிப்புக்கான நுட்பங்கள் போன்றவை இந்த வகுப்பில் பயிற்றுவிக்கப்படுகிறது.

மேலும் அனைத்து எழுத்துக்களையும் கற்ற பின் அவ்வெழுத்துக்களை இணைத்து வரும் வார்த்தைகளை மாணவர்களே எழுதவும் மற்றும் படிக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பொதுவாகப் பிள்ளைகள் சொற்களை எழுதும்போதும் உச்சரிக்கும்போதும் நிறைய தடுமாற்றங்களை எதிர்கொள்வர்.எனவே பாடம் நடத்தும்போது கூடவே பயன்பாட்டுக்கான விதிமுறைகள் பற்றி விளக்கம் அளிக்கப்படுகிறது.

"எங்கள் வகுப்பில் குழந்தைகளை வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று அணிகளாகப் பிரித்து, அவர்களை கதை சொல்லல் / உரையாடுதல் மற்றும் குறித்த மணித்துளிகளில் ஆங்கிலக் கலப்பு இல்லாமலும், நல்ல தமிழ்ச் சொற்களை உபயோகித்தும் பேசும்போது அவர்கள் சார்ந்துள்ள அணிக்கு மதிப்பெண்கள் அளித்தல் என்று கற்றல் முறையையே ஒரு விளையாட்டு போல நடத்துவது எங்கள் வகுப்பின் சிறப்பு' ' என்று தாம் மேற்கொண்டுள்ள அணுகுமுறைகளை சிரத்தையுடன் விவரிக்கிறார் வகுப்பாசிரியர் ஆர்த்தி சிதம்பரம்.


மேலும் "ஒவ்வொரு அணிக்கும் இரு வாரங்களுக்கு ஒருமுறை தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனைத்துப்பிள்ளைகளும் பங்குபெறும் வகையில் அமைத்திருக்கிறோம்" என்று எல்லாப் பிள்ளைகக்களையும் அரவணைத்துச் செல்லும் பாங்கை, அவருக்கே உரித்தான நிதானத்தோடு விளக்குகிறார் ஆர்த்தி. ஆர்த்தி சிதம்பரம் ஒரு தேர்ந்த எழுத்தாளர், இவரது படைப்புக்களை நம் தமிழ்ச்சங்கம் பிரசுரிக்கும் தென்றல் முல்லை பத்திரிகையில் தொடர்ந்து காணலாம்.


சக ஆசிரியராக நீதிதேவன் தண்டபாணி வீட்டுப்பாடம் திருத்துவதோடு குழந்தைகளைப் பரிவோடும் பாசத்தோடும் பொறுமையுடனும் நிர்வகிக்கும் திறமைகொண்டவர், நல்ல தமிழார்வம் மிக்க ஆர்வலர்.

மற்றுமொரு சகாவாக துணைநிற்கும் லோகநாதன், நல்ல கவிதை கதைகள் புனையும் ஆற்றல்கொண்டவர். வகுப்பில் சற்று பின்தங்கி இருக்கும் பிள்ளைகளின்பால் தனிக் கவனம் செலுத்தி அவர்களை உற்சாகப்படுத்திக் கற்க வைக்கும் உயரிய பணியை செவ்வனே செய்துவருகிறார்.

வார்த்தை விளையாட்டின் போது பிள்ளைகள் உச்சரிக்கத் தத்தளிப்பதும், எழுதும்போது 'கால்' எங்கு சேர்ப்பதுஎன்று தடுமாறுவதும், எல்லாத் தடைகளையும் மீறி சரியாக செய்து முடிக்கையில் பெருமிதத்தோடு ஆனந்தக்கூச்சலிடுவதும், மனதில் பரவசத்தையும் அவ்வப்போது வெடிச்சிரிப்பையும் ஏற்படுத்தக்கூடியவை என்கிறார்கள் இந்த ஆசிரியர்கள்.

– சுதாகர் ஆறுமுகம்






நிதிஷ்
நிலை-4



## தமிழ்

தமிழ் ஒரு மொழி. இதில் உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய் என 247 எழுத்துக்கள் உள்ளன. தமிழை இந்தியா, இலங்கை, சிங்கபூர், மலேசியா போன்ற நாடுகளில் பேசப்படுகின்றது. தமிழ் மொழி 4,500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.



ஜெய் சுமேத்
நிலை 4

---

அதிதி பிரபாகர்
நிலை 4

4/22/2018

அன்புள்ள தாத்தா & பாட்டி,

எப்படி இருக்கிங்க தாத்தா & பாட்டி? நாங்க நல்லா இருக்கோம்.

கோடை விடுமுறைக்கு நம்மவீட்டுக்கு வாங்க. நீங்க இங்க வந்தா நம்ம ரொம்ப சந்தோஷமா இருப்போம். ஊரை பார்க்கலாம்!

அன்பு முத்தங்கள
அதிதி & யாழு

---

## பர்மீஸ் மலைப்பாம்பு

அத்விகா சம்பத்குமார்
நிலை-4

ஃப்ளோரிடாவில் உள்ள எவர்கிளேட்ஸ், வட அமெரிக்காவின் மிகப்பெரிய அரை வெப்பமண்டல ஈரநிலம் சூழல் ஆகும். புளோரிடா மக்கல் தண்ணீர்க்கு எவர்களேட்ட நம்பியுள்ளார்கள். எவர்கிளேட்ஸ் பல அருகிவரும் மிருகங்களுக்கு நாயகமான விளங்கிறது. சமீப காலத்தில், பர்மிய மலைப்பாம்புகள் எவர்கிளேட்ஸில் பெருகி உள்ளன.

பர்மீஸ் மலைப்பாம்பு புளோரிடா வந்தது எப்படி? இவைகள் ஆண்ட்ரூ புயலின் போது 1990 களில் வீடு கடைகளில் இருந்து தப்பித்திருக்க வேண்டும் என்ற நம்ப படுகிறது. அவர்கள் எவர்கிளேட்ஸ் கிடைத்துள்ளது முடியும் எப்படி மற்றொரு சாத்தியம் தனர்வான அவர்களை அமைக்க அவர்கள் உரிமையாளர்களுக்கு உள்ளது. 1990 களில், பர்மிய மலைப்பாம்புகள் அழகழகாய் இருந்ததால் வீடுகளில் எல்லோரும் வாங்க தொடங்கினார்கள். ஆனால் இந்த பாம்புகள் 25 அடி நீளம் வளர்ந்த உடன் காடுகளில் விட்டு விட்டார்கள். இந்த பர்மிய மலைப்பாம்புகள் சிறிய விலங்குகள், மற்றும் குழந்தைகளைக் கூட உண்ணும்.

இப்போது பர்மீஸ் மலைப்பாம்புகள் எவர்கிளேட்ஸில் உள்ள முயல்கள், ரக்கூன்கள், நரிகள், மான், மற்றும் பெரிய முதலைகளையும் சாப்பிடுகிறது. தற்போது எவர்கிளேட்ஸில் 150,000 க்கும் மேல் பர்மீஸ் மலைப்பாம்புகள் உள்ளன.

பர்மீஸ் மலைப்பாம்புகள் எவர்கிளேட்ஸில் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது, ஆனால் பார்க் சேவைகள் மலைப்பாம்பு பரவுவதை கட்டுப்படுத்த முயல்கின்றனர்.

---

## சுவாமி விவேகனந்தர்



சுவாமி விவேகனந்தர், அவர்கள் ஒரு துறவி, வேதாந்த தத்துவத்தின் மிக செல்வாக்கு மிக்க ஆன்மிக தலைவர்களுள் ஒருவராக விளங்குபவர்.

ஒரு நாள் அவர் மகாராஜாவின் அரண்மனைக்கு கடவுளை பற்றி கேள்விகளுக்கு பதில் அளிக்க சென்று இருந்தார்.

அப்பொழுது, மகாராஜா மிக்க ஆர்வமாக ஒரு கேள்வியை கேட்டார். அவர் "சுவாமிஜி, கடவுளின் மிது அதிக நம்பிக்கை வைத்து உள்ளிர்கள், உங்களுக்கு கோவில் களில் உள்ள கல் சிலை மீது நம்பிக்கை உள்ளதா?" என்று கேட்டார்.

அதற்க்கு அவர் கூறிய விளக்கம் மிக அருமையானதாக இருந்தது. சுவாமிஜி அவர்கள் மந்திரியை அழைத்து மகாராஜாவின் ஓவியம் ஒன்றை கேட்டார். "இப்போது எச்சில் துப்பும்மாறு கூறினார், இது மகாராஜா அல்ல வெறும் ஓவியம்." என்றார். "என்னால் எப்படி முடியும?" என்றார் மந்திரி.

விவேகனந்தர் மகாராஜாவின் பக்கம் திரும்பி, "இப்பொழுது உங்களுக்கு புரிந்து இருக்கும்," என்று சொன்னார். "கல் சிலை என்பது கடவுளின் குறியிட்டு உருவப்படம்," என்றார் அதனால் தான் அவர் சிறந்த தத்து ஞானியாக விளங்குகின்றார்.

- தான்யா பாபு
நிலை-4.

## தஞ்சாவூர் பெரிய கோவில்



தமிழர்களின் கட்டிடக்கலையின் உச்சம் தஞ்சை பெரிய கோவில். இது 1000 வருடங்களுக்கு முன்பு, மாமன்னன் இராஜராஜ-சோழனால் கட்டப்பட்டது.

### சிறப்புகள்

- 60 மீட்டர் உயரம் கொண்டது
- நந்திசிலை ஒரே கல்லால் செய்யப்பட்டது
- கோவிலின் நிழல் அதன் மீதே விழும்
- 1987'ல் யூனெஸ்கோவால் உலக புராதானச் சின்னமாக அறிவிக்கப்பட்டது

நிலை-4 —கபிலன் பிரசன்னா

## K.காமராஜர்

K.காமராஜர் அவர்கள்


1903-ம் ஆண்டு ஜீலை மாதம் 15-ம் நாள் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள விருதுநகரம் குமாரசாமி நாடாருக்கும் சிவகாமியம்மாவுக்கும் மகனாக பிறந்தார்.

காமராஜர் படிக்காத மேதை ஆவார். காமராஜர் விடுதலைக்காக பாடுபட்டவர். 1953-ம் ஆண்டு காமராஜர் முதலமைச்சராக பதவியேற்றார்.

பள்ளி குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு திட்டத்தை வழங்கி ஏழை மக்களின் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார்.

காமராஜர் 1975-ம் அக்டோபர் 2 ம் தேதி 72 வயதில் காலமானார். காமராஜர் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். அவர் போல நாமும் தன்னலமற்ற, நேர்மையான வாழ்க்கைவாழ வேண்டும்.

கிரித்திக்
நிலை -4



## உறவாய் தீவு

உறவாயில் 6 தீவுகள் உள்ளன. அங்-கு கடல் மணல்கள் பலவித நிறத்தில் உள்ளன. (மஞ்சள், பச்சை, கருப்பு, வெள்ளை) அங்கு சூரிய உதயத்தை நேரடியாக மலை மீதிலிருந்து பார்க்க முடியும்.

நிலை 4 By: Shreya.R.

## என் தங்கை




வணக்கம். என் பெயர் ஷ்யாம் நான் நிலை 4 வகுப்பில் படிக்கிறேன், நான் அர்கோலா பள்ளியில் படிக்கிறேன். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அவள் பெயர் சஞ்சனா. சஞ்சு, பாப்பா என்று கூப்பிடுவோம். அவளுக்கு இரண்டு வயது. அவளுக்கு "எல்மோ" பொம்மை பிடிக்கும். மிகவும் குறும்பு செய்வாள். அண்ணா, அம்மா, அப்பா என்று கூப்பிட்டு பேசுவாள். நாய், பூனை, யானை, குருவி செய்யும் சத்தம் பாப்பாவுக்கு சொல்ல தெரியும்

இப்படிக்கு,
ஷ்யாம் விஜய்குமார்

## புளோரிடா

புளோரிடா அமெரிக்காவில் உள்ள ஒரு மாகாணம். அது ஒரு நல்ல சுற்றுலா தலம். அங்கு குளிர் அதிகமாக இருக்காது. அங்கு நிறைய கடற்கரைகள் உள்ளன. அதுமட்டுமில்லாமல் குழந்தைகளுக்கு ராட்டினம், சறுக்கு விளையாட்டு மற்றும் வியப்பூட்டும் விளையாட்டுக்கள் கொண்ட "டிஸ்னி வேர்ல்டு" உள்ளது. அது எனக்கு மிகவும் பிடித்த இடம்.





சித்தார்த் ராஜன்
நிலை - 4

## அழகு மயில் ஆடும்!

யாழினி ராஜேந்திரகுமார்
நிலை - 4
2017 - 2018



மயில்
இந்தியாவின்
தேசியப் பற




## இந்திய தேசிய கொடி வண்ணங்கள்



இந்திய தேசிய கொடியில் மேலிருந்து கீழாக காவி, வெள்ளை, பச்சை ஆகிய மூன்று வண்ணங்களும் நடுவில் நீலவண்ண நிறத்தில் அசோகச்சக்கரமும் உள்ளது. காவி நிறம் தைரியம் மற்றும் சக்தியை குறிக்கும். நடுவில் வெள்ளை நிறம் அமைதி மற்றும் உண்மையை அசோகச் சக்கரத்துடன் குறிக்கும். கடைசியாக பச்சை நிறம் நம் நிலத்தையும், செடிகளையும் குறிக்கும்.

பெயர்: யோகன்
வகுப்பு: நிலை 4




# தமிழே எங்கள் அணி, கரும்பலகையே

## எங்கள் விளையாட்டு மேடை...


*த.இ.க-1 வகுப்பு , மாணவர்களை 'தமிழ் இணையக் கல்விக் கழகம் - சென்னை' நடத்தும் 'அடிப்படைப் பாடங்கள்' தேர்வுக்கு ஆயத்தப்படுத்தும் வகையில் த.இ.க வழங்கும் பாடத் திட்டத்தின்படி பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த வகுப்பு மாணவர்கள் 'பிற பிள்ளைகள் தமிழ் கற்பதில்லையே நாம் மட்டும் ஏன் தமிழ் கற்க வேண்டும்' என்ற மனநிலையை உடையவர்கள். ஆனால் கற்பிக்கும் பாடத்தை விரைந்து உள்வாங்கிக்கொண்டு வெளிப்படுத்தக்கூடிய தன்மையுள்ளவர்கள். இவர்களுக்கேற்ற வகுப்பாசிரியர்களாக பிரபாகர் ரவீந்திரனும், சங்கீதா ரவிக்குமாரும் அமையப்பெற்றுள்ளது மிகச் சிறப்பு. பிரபாகர் கற்பித்தலுக்குப் புதிய யுக்திகளை வடிவமைப்பதில் கை தேர்ந்தவர். உதாரணமாக, குழந்தைகளை சிறு குழுக்களாகப் பிரித்து இவர் வார்த்தைகளைச் சொல்லச் சொல்ல*


*கரும்பலகையில் ஒவ்வொரு அணியினரும் சொற்களை எழுதும் போட்டி நடத்துவார், அதிக எண்ணிக்கையில் சொற்களை சரியாகவும் பிழையில்லாமலும் எழுதும் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படும். அதேபோல் மாணவர்களை வாட்ஸாப் மூலம் ஒவ்வொருவாரமும் ஒரு குறிப்பிட்ட பத்தியைக் கொடுத்து அதை ஒவ்வொரு மாணவரும் உரக்கப்படித்து ஒலிப்பதிவு செய்து அனுப்பும் முறை. ஒவ்வொரு பதிவிற்கும் 'நல்ல உச்சரிப்பு, அருமையா படிச்சிருக்கே', 'அழகாய் படிச்சிருக்கே, அற்புதம்' மாணவர்களைத் தொடர்ந்து உற்சாகப்படுத்திவருவது இவருடைய செயல்முறையின் தனித்துவம். பிரபாகர் என்பதற்கு மற்றொரு பொருள் 'பிரமாதம்' என்பதோ?*

*சங்கீதாவின் சிறப்பு பெண்களுக்கே உரித்தான கனிவான அணுகுமுறை! இவர் சளைத்தவரா என்ன, நம்மால் முடியுமா, பிள்ளைகளைப் பேசவைக்க முடியுமா என்று ஐயப்படும்போது பிள்ளைகளைப் பட்டிமன்றதிற்கே தயார்செய்துவிட்டார்! பிள்ளைகள் ஒவ்வொருவரும் வீட்டுப்பாடத்தை முடித்து சுறுசுறுப்பாக வாட்ஸப் மூலம் 'டிடிங்...' செய்ததும் சில மணித்துளிகளில் இவர் பதிலுக்கு அருமை, அட்டகாசம் என்று பதில் 'டிடிங்..' செய்து உற்சாகப்படுத்துவார்.*

*பிள்ளைகளிடம் வகுப்பில் பிடித்தது என்ன என்று வினவினால் "வகுப்பில் நாங்கள் ஒழுங்காக நடந்துகொண்டு பாடத்தை விரைந்து முடிக்க உதவினால் கடைசி 5 நிமிஷங்கள் விளையாட விடுவார்கள்'' என்று சொல்லி கண்ணடிக்கிறார்கள்!! விஷயத்தோடு 'வசியமும்' தெரிந்த ஆசிரியர்கள்தான்.. இல்லையா?*


**- சுதாகர் ஆறுமுகம்**




கடல்
ஹரிணி சுதாகர்
த.இ.க. 1
கடலின் வண்ணம் நீலம்,
இறைவன் போட்ட கோலம்.
கடலில் மீன்கள் இருக்கும்,
குதித்து குதித்துப் பார்க்கும்!
கடலில் புதையல் இருக்குமா?
பறவை முத்து குளிக்குமா?
இது தான் என் கேள்விகள்,
என்ன பதில் சொல்லுங்கள்!




சஞ்சித்தா ஜேம்ஸ்
I love you அம்மா
அம்மா...
மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

# த.இ.க இடைநிலை வகுப்பு



# எங்கள் வகுப்புக்கு சாவியே

## தமிழ்த்தாய் வாழ்த்து...

த.இ.க இடைநிலையில் மாணவர்களை த.இ.க இடைநிலை தேர்வு எழுத பயிற்றுவிக்கிறோம்.


ஒவ்வொரு வாரமும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி வகுப்பு ஆரம்பமாகும். பாடம் ஆரம்பிக்கும் முன் அப்பாடத்தின் கதை சுருக்கம் சொல்லப்படும். அதன் பின் பாடம் ஆரம்பமாகும். பாடத்தின் இடையே இரண்டு மாணவர்களை அழைத்து அவர்களுக்கு இடையே பாடம் தொடர்பான உரையாடல் நடத்தப்படும். பாடத்தின் இறுதியில் வினாடி வினா நடத்தப்படும்.


த.இ.க ஆசிரியராகிய நாங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்நிலையில் உள்ள மாணவர்களுக்கு பயிற்றுவிக்கிறோம்.

எங்கள் மாணவர்கள் வகுப்பில் பாடங்களை மிகவும் ஆர்வத்தோடு கற்பது மட்டுமல்லாமல் வீட்டுப்-பாடங்களை நாங்கள் சொல்லியபடி செய்து வருகின்றனர்.

- மஞ்சு சண்முகம்,

மோகன்ராஜ் ஷண்முகம்





அறிஞர் அண்ணா

இளம் வயதிலிருந்தே தமிழ் மொழியில் புலமை பெற்றவரும், அரசியல் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர் தான் C.N அண்ணாதுரை அவர்கள். 1909 செப்டம்பர் மாதம் காஞ்சிபுரத்தில் பிறந்தார். அவர் சிறு வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சியை ஆரம்பித்தார். மேடை பேச்சாலும் அவருடைய எழுத்தாலும் மக்கள் மனதில் இடம் பெற்றவர். அறிஞர் அண்ணாவின் எந்த பேச்சாக இருந்தாலும் மக்கள் அதை ஆர்வத்தோடு கேட்பார்கள். ஒரு கூட்டத்தில் இரவு ரொம்ப நேரம் நேரம் கழித்துதான் அண்ணாவிற்கு பேச வாய்ப்பு கிடைத்தது. மைக்கை பிடித்த அண்ணா

"மாதமோ சித்திரை
நேரமோ பத்தரை
உங்களுக்கோ நித்திரை
போங்கள் உதய சூரியனுக்கு முத்திரை"


என்று கூறி தன்னுடைய உரையை முடித்துக் கொண்டார்.

அண்ணாவின் சில சொற்பொழிவுகளில் இதோ சில,

- ஒன்றே குலம் ஒருவனே தேவன்
- கண்டனத்தை தாங்கிக்கொள்ளும் திடமனம் இல்லை என்றால் கடமையை நிறைவேற்ற முடியாது.

நன்றி
சக்தி செந்தில்நாத்
தநிலை - 2(2)


சித்தார்த் செந்தில்குமரன் TVA 2-2



# மேல்நிலை வகுப்பு



# தமிழில் தேர்ச்சி
# கவுண்டி தேர்வில் வெற்றி
## இதுவே எங்கள் முழக்கம்...

மேல்நிலை வகுப்பு நம் பள்ளியில் நன்கு தேர்ந்த பிள்ளைகளுக்கான மேல்நிலைக்கல்வி பயில்விக்கும் வகுப்பு. இந்த வகுப்பில் பிள்ளைகளுக்கு தாங்களாக சுயமாக சிந்தித்து தமிழில் எழுதும் பேசும் திறமைகளை வளர்த்துக்கொள்ளும்படி பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.


இந்த வகுப்பின் மூலம் நம் பிள்ளைகளை லௌடன் மற்றும் ஃபேர்பாக்ஸ் மாகாணங்கள் நடத்தும் அயல்மொழிக் கல்விச் சான்றிதழ் தேர்வுக்கு ஆயத்தப்படுத்துவது நமது பிரதான நோக்கம். இந்த வகுப்பு, வயது வரம்பின்றி நம் பள்ளியில் தொடர்ந்து தமிழக் கல்வி பயிலும் வகையில் இவ்வாண்டு முதல் அறிமுகப்படுத்தப்-பட்டுச் செம்மையாக நடைபெற்றுவருகிறது. இந்த வகுப்பைக் கையாளும் ஆசிரியர் நம் பள்ளியின் நிறுவனர் - ஆர்வலர்களில் ஒருவரான


மஞ்சு ஈஸ்வரன் அய்யம்பாளையம். மஞ்சு ஒரு சிறந்த தமிழ்ப்பற்றாளர், எழுத்தாளர், பேச்சாளர் மற்றும் சிந்தனையாளர். நம் பள்ளியின் செயல்திட்ட பாடத்திட்ட வடிவமைப்புக்கும் முன்னேற்றத்திற்கும் தொடர்ந்து தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள பண்பாளர்.


ஒவ்வொருவாரமும் ஏதாவது ஒரு தலைப்பில் சில பல வாக்கியங்களை எழுதவும் பேசவும் பயிற்சியளிக்கிறோம். உதாரணமாக 'உலக தண்ணீர் தினம்' பற்றி உரையாட, எழுத வைப்போம். பிள்ளைகள் கற்பதோடு தம் பொது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் வகையிலும் நமது பயிற்சிமுறை அமைக்கப்பட்டுள்ளது என்று உவகையோடு உணர்த்துகிறார் மஞ்சு. "எமது வகுப்பில் 'தமக்குப்பிடித்த நூல்கள்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தப் பணித்தபோது பிள்ளைகள் ஒவ்வொருவரும் பல நல்ல நூல்கள் பற்றி பல கோணங்களில் பேசி நெகிழ்ச்சியுற வைத்துவிட்டனர்" என்று வர்ணிக்கிறார் இவர்.

வீட்டுப்பாடமும் பிள்ளைகள் தம் சிந்தனைகளைச் சரளமாகத் தமிழில் பதிவிக்கும், பரிமாறிக்கொள்ளும் வகையில் கொடுக்கப்படுகிறது. வளர்ந்த பிள்ளைகளுக்கு எப்படி வாய்ப்பூட்டு போட்டு அமர வைக்கிறீர்கள் என்று கேட்டால் 'என் வகுப்பு பிள்ளைகள் தங்கமான பிள்ளைகள்' என்று புன்னகைக்கிறார் மஞ்சு. தேர்ந்த ஆசிரியைக்குத் தேன்மொழி பேசி பிள்ளைகளைத் தேர்த்திவிடத் தெரியாதா என்ன?

**– சுதாகர் ஆறுமுகம்**





கனவு இல்லம்


இது நான் மூன்றாம வகுப்ப படிக்கும்போது வரைந்த

கனவு இல்லம். என் வீட்டை சுற்றி பச்சை புல்வெளி மற்றும் மரங்கள் வேண்டும். வீட்டின் முன்புறம் வட்ட வடிவில் சாலை வேண்டும், அதற்க்கு நடுவில் பூச்செடிகள் வேண்டும். நிறைய ஜன்னல்கள் வேண்டும் இரண்டு கார் நிறுத்தும் வசதி வேண்டும் எல்லா தொழில்நுட்பவசதியுடனும் என்னுடைய வீடு இருக்க வேண்டும்.

நன்றி!!!

கிருஷிகன்

மேல்நிலை



செவ்வந்தியர்களின் வாழ்க்கையில் பெண்களின் பங்கு மிகமுக்கியமானது. குழந்தைகளை வளர்ப்பதோடல்லமல் வீடு கட்டும் பணிகளிலும் பெண்கள் வெகுவாக ஈடுபட்டனர்.



இவுங்க மிகவும் அழகாகவும் அறிவாளியாகவும் இருப்பாங்க

இவுங்க மிகவும் அக்கறையோடும், எப்போதும் என்னை பார்த்துக் கொள்வார்கள்

எனக்கு என்ன பிரச்சினைகள் இருந்தாலும், இவுங்க தான் தீர்ப்பாங்க

இவுங்க தான் என்னை இவ்வுலகுக்கு அறிமுகப்படுத்தினாங்க

என்னை ஆதரிப்பவர், ஆராதிப்பவர்

என் முதுகெலும்பு

என் அம்மா


- கயல் சதாசிவம் ♥



மேல்நிலை சம்பிரீத்தி முத்துசாமி

கோய் மீன் குறிப்புகள்

- கோய் மீன் மற்றும் தங்க மீன் ஒரே குடும்பத்தை சார்ந்தது.
- கோய் மீன் புத்திசாலி மீன், மற்றும் அழகான மீன்.
- ஜப்பான் ராஜாவுக்கு பரிசாக கோய் மீன் கொடுத்தபின் பிரபலம் அடைந்தது.








# அரும்பி வரும் நம் பள்ளியின் மெல்லிசைக் குழு

கடல் தாண்டி அயல்நாட்டில் வளரும் நம் குழந்தைகள் பாடுவதும் ஆடுவதும் நம்மை ஆனந்தப்பட வைக்கும் செயல்கள். அதுவும் அவர்கள் பாடுவது தமிழ்ப் பாட்டாக இருந்துவிட்டால் அந்த ஆனந்தம் இரட்டிப்பாகும். கிரீடத்தில் மயிலிறகு சூட்டியதைப்போல் தமிழ் சினிமா இசை உலகின் மிகப்பெரும் ஜாம்பவான்கள் இருவரது பாடல்களை பாடினால், நாம் பரவச நிலைக்கே சென்று விடுவோம். தமிழ் உலகிற்கு சிம்பொனியை அறிமுகம் செய்தது நம் ராஜா அவர்கள். தமிழ்த் திரை இசையை உலகிற்கு எடுத்து சென்றவர் A. R. ரஹ்மான் அவர்கள். இவர்கள் இருவரும் இசையில் பல சாதனைகள் செய்தவர்கள், இவர்களின் இசையில் மனதை மயக்கும் பல இன்னிசைப் பாடல்கள் வந்துள்ளன. இவர்கள் இருவரைத் தவிர அருமையான காதிற்கினிய பாடல்களை மற்ற இசையமைப்பாளர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு நம் மனதை வென்ற சில பாடல்களை நம் பள்ளி சிறுவர், சிறுமியர் மிக அழகான இசைத்தொகுப்பாக வழங்கினார்கள்.

இசைக்குழு உருவாவது கல்லூரிகளிலும், கல்லூரி முடித்த இளம்பருவத்தினர் மத்தியிலும் அதிகமாக காணப்படும். ஆனால் நம் பள்ளியின் இசைக்குழுவில் அதிகபட்ச வயதே பதினைந்துதான். குழுவின் சுட்டிக்குரலுக்கு ஐந்து வயதுதான். ஆக ஐந்து வயதிலிருந்து, பதினைந்து வயது வரை உள்ள சிறுவர் சிறுமியர் புல்லாங்குழல், வயலின், பியானோ(Keyboard), கிட்டார்(Guitar), மிருதங்கம், கபாஸா(Cabasa) முதலான வாத்தியங்களை இசைத்து, குழுவாகவும், தனியாகவும் பாடினார்கள். இவர்கள் யாரும் இந்திய முறையிலான இசைக்கருவி கற்றவர்களில்லை, மேற்கத்திய இசைப்பண்(musical notes) மற்றுமே கற்றவர்கள். தமிழ் சினிமா பாடல்களை அதிகமாக கேட்டவர்களுமில்லை. தங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பாடலின் இசைக்கோர்வையை வைத்தும், பாடல்களை கேட்டும் பயிற்சி செய்தார்கள். அதேபோல் ஒவ்வொரு குழந்தையும் ஒரே அளவிற்கான அனுபவம் உள்ளவர்கள் இல்லை. அவரவர் அனுபவத்திற்கு ஏற்ப இசைக்கருவி மற்றும் பாடும் வாய்ப்பை வழங்கினோம். குழந்தைகள் மிகச்சிறப்பாக நிகழ்ச்சியை கொடுத்தார்கள் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க வாய்ப்பில்லை.

இசைக்கருவி வாசிக்கும் குழந்தைகளுக்கு இசைப்பண் கொடுத்தோம், அதை வைத்து மிக அருமையாக பயிற்சி செய்தார்கள். பாட்டு பாடும் குழந்தைகளுக்கு எங்களால் இயன்ற அளவு பாட பயிற்சி கொடுத்தோம். குழந்தைகளும், அவர்களுடைய பள்ளி வீட்டுப்பாடங்களுக்கிடையே மிகுந்த ஈடுபாட்டுடன் பாடவும், இசைக்கருவி இசைக்கவும் பயிற்சி செய்துள்ளார்கள். இந்த நிகழ்ச்சியின் மூலம் நாம் கேட்டு வளர்ந்த தமிழ்ப் பாடல்களை நம் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதில் நாங்கள் பரவசமடைந்தோம் என்று கூறினால் அது மிகையில்லை.

சென்ற ஆண்டு இசைக்கருவிகளை மட்டுமே கொண்டு வெகுசில குழந்தைகளுடன் இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினோம். அந்த நிகழ்ச்சியை நம் பள்ளி மேடையில் மட்டுமில்லாமல் வாஷிங்டன் தமிழ் சங்க மேடையிலும் வழங்கி பலரது பாராட்டுகளை பெற்றோம். அந்த நிகழ்ச்சி தந்த உத்வேகத்தில் இந்த ஆண்டு இசைக்கருவிகள் மட்டுமில்லாமல் குழந்தைகளை பாட வைக்கவும் முயற்சி கொண்டோம். எங்கள் முயற்சி நிச்சயமாக அனைவருக்கும் ஒரு புது அனுபவத்தை கொடுத்திருக்கும் என்பதில் எங்களுக்கு ஐயம் இல்லை. ஒவ்வொரு ஒத்திகையிலும் பெற்றோரும், குழந்தைகளும் காட்டிய ஈடுபாடு, இந்த இசைக்குழுவை பள்ளி நிகழ்ச்சியோடு விட்டுவிடாமல் அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்லும் உற்சாகத்தை தந்துள்ளது.

அடுத்த பள்ளி விழாவரை காத்திருக்காமல் இடைப்பட்ட காலத்தில் சிறு சிறு இசை நிகழ்ச்சிகள் நடத்தலாம் என்பது எங்கள் எண்ணங்களில் உள்ளது; பெற்றோர் மற்றும் குழந்தைகளின் ஒத்துழைப்புடன் கண்டிப்பாக அதை நடத்துவோம் என்ற நம்பிக்கையும் உள்ளது. இன்னும் பல மடங்கு மெருகேற்றிய இசை நிகழ்ச்சியோடு உங்களை சந்திக்கிறோம். அதுவரை இந்த ஆண்டு விழாவில் குழந்தைகள் நிகழ்த்திய இன்னிசை உங்கள் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும்!!

**-சங்கமம் இசைக்குழு**




சங்கமம் தமிழ்ப்பள்ளி
Sangamam Tamil School, Virginia - USA

# சங்கமம் தமிழ்ப்பள்ளியோடு எங்கள் பயணம்

நாங்கள் ஷ்ரேஸ்தா பீட்டர் ராஜ் மற்றும் ஷ்ரேயா சந்திரன். எங்களுக்கு பதின்மூன்று வயதாகிறது, ரேச்சல் கார்சன் நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கிறோம். நாங்கள் சங்கமம் தமிழ் பள்ளியில் நான்கு வருடங்கள் படித்தோம் (TVA-1, TVA-21, TVA-22, மேல்நிலை). எங்களுடைய ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் எங்கள் அனுபவத்தை மிகவும் மகிழ்ச்சியாக ஆக்கினார்கள். தமிழ்ப் பள்ளிக்கு செல்வதால் பல நன்மைகள் இருக்கின்றன. தமிழ் பள்ளிக்கு சென்றதால் எங்களுக்கு பல தோழிகள் கிடைத்து இருக்கிறார்கள். நாங்கள் இருவருமே தமிழ் பள்ளியில்தான் அறிமுகம் ஆனோம். இப்பொழுது இணைபிரியா தோழிகள் ஆகி விட்டோம். எங்கள் தோழிகளை பார்ப்பதற்காகவே ஒவ்வொரு வாரமும் தமிழ் பள்ளிக்கு செல்ல ஆர்வமாக இருப்போம். எங்களுடைய ஆசிரியர்கள் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் மீது கொண்ட ஆர்வம் அவர்களை நல்ல ஆசிரியர்கள் ஆக்கியது. அதனால் அவர்கள் மிகவும் விருப்பத்துடன் நன்றாக சொல்லிக் கொடுத்தார்கள். எங்கள் ஆசிரியர்கள் இல்லாமல் நாங்கள் தமிழ் மொழியை கற்றிருக்க முடியாது. ஒரு ஆண்டில் தமிழ் பள்ளியில் இரு விழாக்கள் நடக்கும், பொங்கல் விழா மற்றும் பள்ளி ஆண்டு விழா.



**ஷ்ரேயா சந்திரன்**



**ஷ்ரேஸ்தா பீட்டர் ராஜ்**

இந்த விழாக்களில் நாங்கள் தமிழ் பாடல்களுக்கு நடனம் ஆடியிருக்கிறோம். நடனம் மட்டும் இல்லாமல் நாங்கள் நாடகங்களில் நடித்து இருக்கிறோம். இதனால் நாங்கள் தமிழில் நன்றாக பேச கற்று கொண்டிருக்கிறோம். மேலும் தமிழ் கலாச்சாரத்தை பற்றி தெரிந்து கொண்டோம். இந்த நிகழ்ச்சிகள் எங்களுக்கு நல்ல தோழிகளை தந்திருக்கிறது. சென்ற வருடம் ஆண்டு விழாவில் ஒரு குழுவாக தமிழ் பாடல்களுக்கு இசைக்கருவிகள் வாசித்தோம். எங்களுக்கு அது மிகவும் பிடித்திருந்தது.

நாங்கள் இருவரும் மேல்நிலை பள்ளி உலக மொழி கிரெடிட்டுக்கு, உலக மொழி பரீட்சை எழுதி தேர்ச்சி அடைந்தோம். இதனால் மேல்நிலை பள்ளி பட்டம் வாங்க தேவையான நான்கு கிரெடிட்சில் இரண்டு கிரெடிட்ஸ் எங்களுக்கு கிடைத்துவிட்டது. முதலில் தமிழ் கற்றுக்கொள்வது பெரிய விஷயமாக தெரியாது, ஆனால் தமிழ் கற்றுக்கொள்வது நமக்கு பயனளிக்கும்.

நாங்கள் தமிழ் கற்று கொள்ள உதவிய ஆசிரியர்களுக்கும் எங்கள் பெற்றோர்களுக்கும் நாங்கள் நன்றி கூறிக்கொள்கிறோம். தமிழ் மொழி கற்றுக்கொண்டதை நாங்கள் பெருமையாக நினைக்கிறோம். நீங்களும்தான்!!

# லௌடன் மற்றும் ஃபேர்பாக்ஸ் கவுண்டி தேர்வில் தேர்ச்சி பெற்ற நமது பள்ளி மாணவர்கள்



ஷ்ரேயா சந்திரன்



ஜோனியல் ஜெரோம்



ஷ்ரேஸ்தா பீட்டர் ராஜ்



காவ்யா சண்முகம்

# நன்றி! நன்றி!

நம் பள்ளி இனிதே நடைபெற துணையாக இருக்கும் ஆசிரிய பெருமக்களுக்கு நன்றி. சங்கமம் தமிழ்ப்பள்ளியுடன் பயணிக்கும் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நன்றி. நம் பள்ளியின் பணிகள் அனைத்தையும் சிரமம் பாராமல் செய்து முடிக்கும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் நன்றி.

பள்ளி என்பது குழந்தைகளுக்குப் பாடம் போதிப்பதாக மட்டும் இருக்கக்கூடாது. குழந்தைகளின் தனிப்பட்ட திறன்களை வெளிக்கொணர்வதே பள்ளிக் கூடத்தின் செயல்பாடாக இருக்க வேண்டும். குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டி, அவர்கள் முன்னேற, தன்னை உலகிற்கு வெளிப்படுத்த அத்துனை வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருவதாக இருக்க வேண்டும். ஓவ்வோரு குழந்தைக்குள்ளும் கண்டிப்பாக ஓர் திறமை இருக்கின்றது. அத்திறன்களை வெளிப்படுத்தும் நோக்கத்தில் மலர்ந்ததுதான் இந்த ஆண்டு மலர்.

எந்த ஒரு செயலிலும் அனைவரும் ஒன்றாக ஈடுபடும் பொழுது அது மிகவும் சிறப்பாக அமையும் என்பதை உணர்ந்தோம். ஒன்று சேர்ந்து ஆண்டு மலரை உருவாக்க உழைத்தோம். ஆண்டு மலரை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.  ஆண்டு மலர் வெளிவர உதவிய அனைவருக்கும் மிக்க நன்றி.

## ஆண்டு மலர் உதவியாளர்கள்

| | |
|---|---|
| திருமதி. மஞ்சு அய்யம்பாளையம் | திரு. சுதாகர் ஆறுமுகம் |
| திருமதி. ஆர்த்தி சிதம்பரம் | திரு. மோகன்ராஜ் ஷண்முகம் |
| திருமதி. கவிதா மனோஜ்குமார் | திரு. லோகநாதன் ராமசாமி |
| திருமதி. அனிதா செந்தில்குமார் | திரு. தீபக் (செல்வகுமார் விஸ்வநாதன்) |
| திருமதி. மஞ்சு சண்முகம் | திரு. நீதிதேவன் தண்டபாணி |
| திருமதி. கலை மகேஷ் | திரு. தியாகராஜன் |
| சங்கமம் மாணவர்கள் | சங்கமம் இசைக்குழு |

# தன்னார்வலர்கள்

| பெயர் | துவக்கம் | நிறைவு | பணி |
|---|---|---|---|
| கவிதா மனோஜ்குமார் | 2013 | இன்றுவரை | ஆசிரியர் |
| சாந்தகுமார் காளியப்பன் | 2013 | இன்றுவரை | ஆர்வலர், ஆசிரியர், நிதி, நிர்வாகம் |
| சாய்பாபா பூபாலன் | 2013 | இன்றுவரை | நிதி, த இ க அங்கீகாரம் |
| மஞ்சு அய்யம்பாளையம் | 2013 | இன்றுவரை | ஆர்வலர், ஆசிரியர், பாடநூல் |
| மனோஜ்குமார் சுப்பிரமணியம் | 2013 | இன்றுவரை | ஆர்வலர், நிர்வாகம், பாடநூல் |
| மோகன்ராஜ் ஷண்முகம் | 2013 | இன்றுவரை | ஆர்வலர், ஆசிரியர், பாடநூல் |
| ஹரிதா தயாளன் | 2013 | இன்றுவரை | ஆசிரியர் |
| கலைவாணி மகேஷ். | 2014 | இன்றுவரை | ஆசிரியர் |
| கீர்த்திகா உலகநாதன் | 2014 | இன்றுவரை | ஆர்வலர், ஆசிரியர், நிர்வாகம் |
| சோபியா ஜேம்ஸ், | 2014 | இன்றுவரை | ஆசிரியர் |
| தீபா செந்தில்நாத் | 2014 | இன்றுவரை | ஆர்வலர், ஆசிரியர், நிர்வாகம், அரங்க அமைப்பு |
| பிரபாகர் ரவீந்திரன் | 2014 | இன்றுவரை | ஆர்வலர், ஆசிரியர், பாடநூல், 501 c அங்கீகாரம், ஒலி/ஒளி |
| ஆர்த்தி சிதம்பரம் | 2015 | இன்றுவரை | ஆசிரியர், பாடநூல் |
| சங்கீதா ராமகிருஷ்ணன் | 2015 | இன்றுவரை | ஆசிரியர், பாடநூல், நிதி |
| யோகேஸ்வரி கோபிகிருஷ்ணன் | 2015 | இன்றுவரை | ஆசிரியர், பாடநூல் |
| ராணி சுதாகர் | 2015 | இன்றுவரை | ஆசிரியர் |
| சுஜாதா இளங்கோவன் | 2016 | இன்றுவரை | ஆசிரியர் |
| நீதிதேவன் தண்டபாணி | 2016 | இன்றுவரை | ஆசிரியர், பாடநூல் |
| மஞ்சு ஷண்முகசுந்தரம் | 2016 | இன்றுவரை | ஆசிரியர், நிர்வாகம் |
| அனிதா செந்தில்குமார் | 2017 | இன்றுவரை | ஆசிரியர் |
| அனிதா பாபு | 2017 | இன்றுவரை | ஆசிரியர் |
| இந்திரா மாறுசாமி | 2017 | இன்றுவரை | நிர்வாகம் |
| சங்கீதா ரவிக்குமார் | 2017 | இன்றுவரை | ஆசிரியர் |
| சரவணபவன் நாட்டாம்பாளையம் | 2017 | இன்றுவரை | ஆர்வலர், நிர்வாகம் |
| தீபக் | 2017 | இன்றுவரை | ஆசிரியர் |
| நித்யா சச்சிதானந்தம் | 2017 | இன்றுவரை | ஆசிரியர் |
| ரவிக்குமார் குணசேகரன் | 2017 | இன்றுவரை | ஆசிரியர் |
| லோகநாதன் | 2017 | இன்றுவரை | ஆசிரியர் |
| வினுபிரியா ஆறுசாமி | 2017 | இன்றுவரை | ஆர்வலர், நூலகம் |
| ஷீபா | 2017 | இன்றுவரை | ஆர்வலர், நூலகம் |
| சந்திரன் முத்துசாமி | 2013 | 2017 | ஆர்வலர், நிதி |
| யுவராணி சேகர் | 2014 | 2017 | ஆசிரியர், பாடநூல் |
| சந்தோஷ்குமார் ஷண்முகசுந்தரம் | 2015 | 2017 | நிர்வாகம் |
| சுதாகர் ஆறுமுகம் | 2015 | 2017 | ஆர்வலர், நிர்வாகம் |
| பழனி ராமசாமி | 2015 | 2017 | நிர்வாகம் |
| மலர் பீட்டர் | 2015 | 2017 | ஆர்வலர், நிர்வாகம் |
| வெரோனிக்கா விஸ்வநாதன் | 2015 | 2017 | ஆசிரியர் |
| சுதா ராமசாமி | 2016 | 2017 | ஆசிரியர் |
| மேனகா முத்து | 2013 | 2016 | ஆசிரியர் |
| மேனகா சரவணபவன் | 2015 | 2016 | ஆசிரியர் |
| கோபாலகிருஷ்ணன் சுந்தரம் | 2013 | 2015 | ஆர்வலர், நிறுவன விதி வரைவு |
| தியாகு முத்துசாமி | 2013 | 2015 | ஆர்வலர், இணைய தளம் |
| முத்துசேகரன் செல்லப்பகவுண்டர் | 2013 | 2015 | ஆர்வலர், நிதி, 501 c அங்கீகாரம் |
| மெர்லின் ஜெரோம் | 2013 | 2015 | ஆசிரியர், பாடநூல் |
| ரவி சுப்பிரமணியம் | 2013 | 2015 | ஆசிரியர் |
| ராஜேஷ் கருப்புசாமி | 2013 | 2015 | ஆர்வலர் |
| வெங்கட் கவுண்டர் | 2013 | 2015 | ஆர்வலர் |
| ஜெரோம் மரியரத்தினம் | 2013 | 2015 | ஆர்வலர் |
| லீமா ராமலிங்கம் | 2014 | 2015 | ஆசிரியர் |
| ஸ்டார்லெட் பிரிட்டோ | 2014 | 2015 | ஆசிரியர் |
| லதா ராமதாஸ் | 2013 | 2014 | ஆசிரியர் |


ORDER NOW
703-961-1600
info@chennaiexpressva.com
UNIQUE TASTE
FRESH
MENU
EVERY DAY
www.chennaiexpressva.com
CHENNAI EXPRESS


WE DO CATERING FOR ALL YOUR OCCASIONS.
ALSO, WE DO LIVE DOSA, LIVE APPAM ETC.
CHENNAI EXPRESS
TO FEEL THE SOUTH-INDIAN TASTE
RESTAURANT-TAKEOUT-CATERING